## சிங்களத் தேர்ச்சியின்மையினுல் வேலையிழக்கும் 27 ஆசிரியர் பிரச்னை

Registered as a Newspaper in Ceylon     வார மலர் ★ ★     விலை சதம் 20

# ஈழநாடு
EELA NADU

மலர் 11     சௌமிய சித்திரை 19     ஸபர் 13     (1-5-69)     வியாழக்கிழமை     இதழ் 79

பாலக்காடு
RVG
பீடிகளையே
உபயோகியுங்கள்

மில்க்வைற்
நீல சோப்
10 சதக் கட்டி
வாங்கி அதிக லாபம்
அடையுங்கள்

யாழ்ப்பாணம், புதன்

சிங்களத் தேர்ச்சியின்மை காரணத்தால் வேலைநீக்க அறிவித்தலுக்கு உள்ளாகியிருக்கும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 27 கைத்தொழில் பகுதி ஆசிரியர்சங்கத் தூதுக்குழுவினர் நேற்றுக்காலை உபசபாநாயகர் திரு. எம். சிவசிதம்பரத்தைச் சந்தித்து இது பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தினுர்கள்.

இலங்கை ஐக்கிய நெசவு ஆசிரியர் சங்க உபதலைவர் திரு. வே. மகாதேவன், காரியதரிசி ச. தம்பையா ஆகியோர் தலைமையில் இத்தூதுகோஷ்டி உபசபாநாயகரை நேற்றுக்காலை யாழ்ப்பாணத்திலுள்ள காங்கிரஸ் காரியாலயத்தில்சந்தித்தது.

வேலை நீக்க அறிவித்தலுக்குள்ளாகியிருக்கும் நெசவாசிரியர்கள், தையல் ஆசிரியர்கள், தச்சுத் தொழில் பயிற்சி ஆசிரியர்கள் சிங்களம் படிக்க முடியாதிருக்கும் சூழ்நிலைபற்றியும் இத் தூதுக் குழு உபசபாநாயகருக்கு எடுத்துக் கூறியது.

இத் தூதுக் குழு இன்று காலை தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தையும் சந்தித்து இதுபற்றி பேச்சுவார்த்தை நடத்தவிருக்கிருர்கள்.

இதுவிஷயமாக உள்நாட்டமைச்சர் டாக்டர் டபிள்யூ தகநாயகாவையும் சந்தித்து இது சம்பந்தமாகப் பேட்டி கண்டு தங்கள் நிலைமை பற்றி எடுத்துக் கூறவுள்ளனர். (கா நி)

### தொழிலாளரின் பாதுகாவலர்

மானிப்பாய், வியா.

நாளை (2-5-69) பிற்பகல் புனித சூசையப்பரின் திருச்சொரூபம் அலங்கரிக்கப்பட்ட தேரில் வைக்கடபட்டு மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்திலிருந்து ஊர்வலமாகப் புறப்பட்டு புனித அன்னம்மாள் ஆலயத்தை வந்தடையும் 'தொழிலாளரின் பாதுகாவலர்' என்பது பற்றி வண. குரவர் எஸ். பிரான்ஸிஸ் பின்னர் பேசுவார்.

### 2-வதுராக்கெட் சோதனை நிலையம்

புதுடில்லி, ஏப். 30

ஆந்திரப்பிரதேசத்தில் 2-வது ராக்கெட் சோதனை நிலையம் அமைக்கப்படவிருக்கிறது. 12மாதங்களில் இச் சோதனை நிலையம் இயங்கும்.

படித்த வாலிபர் வேலையின்மையை நீக்குவதோடு

# சகல சிறு ஊழியர்களினதும் சம்பளம் உயர்த்தப்பட வேண்டும்





## மே தினக் கூட்டத்தில் உப சபாநாயகர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், வியாழன்

"அரசாங்க சம்பள நிர்ணயக் கமிஷனின் அறிக்கை ஜூன் மாதம் சமர்ப்பிக்கப்பட்டதும், சகல சிறு ஊழியர்களினதும் சம்பளம் உடனடியாக உயர்த்தப்படவேண்டும். அத்துடன் படித்த வாலிபர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் அரசாங்கம் உடனடியாகத் தீர்க்கவேண்டும். இதனையே அரசாங்கத்துக்கு எனது மேதின வேண்டுகோளாக விடுக்கின்றேன்.

[illegible]ப்பிட்டி எம். பி.யும், உபசபாநாயகருமான திரு எம். சிவசிதம்பரம் நேற்றிரவு [illegible] நடைபெற்ற மேதின விழாவில் பேசுகையில் இவ்வாறு

ஆரம்பமாகிச் சோ[illegible] மைதானத்தை வந்தடைந்[illegible] [illegible] தமிழரசுக்கட்சியினர் அரசாங்கத்திலிருந்து வெளியேறியது ஒரு தேர்தல் [illegible]

டாடவில்லை. இலங்கையில் வாழும் ஒருபெரும்பான்மை இனமான சிங்களமக்கள் சமய அடிப்படையில்விடுத்த அன்பான வேண்டுகோளை அனுசரித்து அதற்கு மதிப்[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மனிதனின் விலங்கின ஆசைகளை விலக்கி அமைதி தேடி அரசமரம் நாடிய புத்தரை உலக அமைதிக்காக வேண்டி நிற்கிறுர் இந்த இள நங்கை.

—படப்பிடிப்பு: ஏ. வி. எம்.

# 'பாட்டாளி மக்களின் அயராத உழைப்பே வெற்றிக்கு காரணம்'

## பிரதமரின் மேதினச் செய்தி

கோட்டை, புதன்

''கைத்தொழில் துறையில் முன்னெருபோதுமில்லாத வெற்றி இப்போது நமக்குக் கிடைத்துள்ளது. பாட்டாளி மக்களின் அயராத உழைப்பே இந்தவெற்றிக்குக் காரணம். விவசாயிகளுக்கும் இந்தவகையில் பெரும் பங்குண்டு'' என்று பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா விடுத்துள்ள மேதினச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டு மக்களுக்கு பிரதமர் விடுத்துள்ள மேதினச் செய்தியில் பிரதமர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கைத்தொழில் பிரிவில் 44 வீதம் அதிகரிப்பு ஏற்பட்டிருக்கிறது. இந்த நாட்டின் தொழிலாள வர்க்கத்துக்கு என் இதய பூர்வமான பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். விவசாயத்துறையிலும் பெரும் வெற்றி கிடைத்துள்ளது

எதிர்காலத்தில் விவசாயிகளும், கைத்தொழில் நிறுவனங்களில் வேலைசெய்பவர்களும் தொழில்நுட்ப முறைகளைப் பயிலுவதற்குத் தயாராக இருக்கவேண்டும்.

# தொழிலாளர் நாடான செக்கில்கூட மேதினவிழா தடைப்பட்டுள்ளதாம்

## மேதினக் கூட்டத்தில் ஜே. ஆர்.

கொழும்பு, புதன்

மற்ற அரசாங்கங்களைவிட யு. என். பி. அரசாங்கம் தொழிற்சங்க உரிமைகளுக்காகப் பாடுபட்டுள்ளது. செக்கோஸ்லவேக்கியா போன்ற தொழிலாளர் ஆட்சி செய்யும் நாட்டில் கூட மேதினம் தடைப்பட்டிருக்கிறது. அங்குள்ள சர்வாதிகார ஆட்சியே இதற்குக் காரணம். நம் நாட்டு எதிர்க்கட்சிகூட சர்வாதிகார ஆட்சிசெய்ய முயற்சித்தது. ஆனு நாம் ஜனநாயகத்தை பாதுகாத்து, நாட்டில் பிறந்த தொழிலாளர்களுக்காக உழைத்துவருகிறோம்.

இவ்வாறு கொழும்பு காலிமுக மைதானத்தில் நடைபெற்ற யு. என். பி. மேதினக்கூட்டத்தில் பேசிய ராஜாங்க அமைச்சர் கூறினர்.

பலத்த மழை காரணமாக கூட்டம் அதிகநேரம் நடைபெறமுடியவில்லை. இதில் கலந்துகொண்டு பிரதமர் உட்பட உள்ளூராட்சிஅமைச்சர், தொழில் அமைச்சர் ஆகியோர் பேசினர்.

# ஆயுதம் தாங்கிய பொலிஸ் வடக்கில் ரோந்து

## இராணுவத்தினர் யாழ் நகரில் முகாம்

யாழ்ப்பாணம், வியாழன்

வடபகுதியின் முழுப் பொலிசாரும், ராணுவத்தினரும் இன்று உஷார் படுத்தப்பட்டுள்ளனர். அரசாங்கத்தின் சட்டத்தை மீறி யாழ்ப்பாணக் குடாநாட்டில் இன்று மேதினம் கொண்டாடப்படலாம் என்ற சந்தேகத்திலேயே வடபகுதி பொலிஸ் சுப்பிரின்டன்ட் திரு. ஆர். சுந்தரலிங்கம் இந்த முன்னேற்பாட்டைச் செய்துள்ளார்.

சுமார் 300க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் யாழ்ப்பாணம் சிங்கள மகா வித்தியாலயத்தில் முகாமிட்டுள்ளனர். எந்த நேரத்திலும் பொலிஸ்சுப்பிரின்டனிடமிருந்து அழைப்புக் கிடைத்தால் இவர்கள் சேவைக்குச் செல்வர் என இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணக் குடாநாடெங்கும் இன்று காலை முதல் நள்ளிரவு வரை ஆயுதம் தாங்கிய பொலிசார் வீதிகளில் ரோந்து சுற்றித் திரிவர். சட்டத்தை மீறி, ஊர்வலம் நடத்துபவர்கள், கூட்டம் நடத்துபவர்கள் சகலரையும் உடனடியாகக் கைதுசெய்யுமாறு சகல பொலிசாருக்கும் பொலிஸ் அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

கூட்டத்துக்கோ, ஊர்வலத்துக்கோ, ஒலிபெருக்கிக்கோ பொலிசார் அனுமதிவழங்காத போதும் இரண்டு அரசியல் கட்சிகளின் தொழிற்சங்கங்கள் இன்று யாழ்ப்பாணத்தில் மேதினக்கூட்டம் நடத்தலாம் என பொலிசார் கருதுகின்றனர்.

ஒரு கூட்டம் பாஷையூரிலும், மற்றது கோட்டை வெளியிலும் நடக்கலாம் என தகவல் கிடைத்துள்ளது. இவ்விருஇடங்களிலும் கூடுதலாக ஆயுதம் தாங்கிய பொலிசார் நிலைமையைக் கண்காணிக்க கடமைபுரிவார்கள் எனவும் பொலிஸ் சுப்பிரிண்டன்ட் நேற்றுத் தெரிவித்தார். காநி

ரவு கோட்டை வெளியில் நடைபெற்ற மேதினவிழாவில் பேசுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ்காங்கிரஸ் ஆதிக்கத்திலுள்ள தொழிற்சங்கங்களின் சார்பில் திரு. என். ரி. சிவஞானம் தலைமையில் இவ்விழா நடைபெற்றது. நாச்சிமார் கோவிலடியிலிருந்து உபசபாநாயகர் தலைமையில் மேதினஊர்வலம் தமிழரசுக்கட்சியினர் அரசாங்கத்திலிருந்து வெளியேறியது ஒரு தேர்தல் தந்திரம் என்று குறிப்பிட்ட திரு. சிவசிதம்பரம் மேலும் பேசுகையில், தெரிவித்ததாவது:

அரசாங்கத்துக்குப் பயந்தோ அல்லது பொலிஸாருக்குப் பயந்தோ மேதினத்தை நாம் இன்று கொண் சமய அடிப்படையில்விடுத்த அன்பான வேண்டுகோளை அனுசரித்து அதற்கு மதிப்புக் கொடுத்தே நாம் மேதினத்தை இன்றுகொண்டாடுகின்றோம். இது இரு இனத்தவர்களிடையேயும் பரஸ்பர நல்லுறவை வலுவடையச் செய்யுமென்பதில் ஐயமில்லை. (கா. நி.)

# 'தமிழுக்கு சமத்துவம் பெறமுடியாது சமசந்தர்ப்பத்துக்கு உழைப்போம்

## மேதினக்கூட்டத்தில் — வி. பொன்னம்பலம்

யாழ்ப்பாணம், வியா.

''எம்மால் தமிழ் மொழிக்கு சமத்துவம் தரமுடியாது. நாம் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் சம சந்தர்ப்பம் கேட்கின்றேமேயொழிய தமிழுக்கும் சிங்களத்துக்கும் சம அந்தஸ்து கேட்கவில்லை. தமிர்களுக்காகப் பாடுபடுகின்றேம் என்று கூறிக்கொள்ளும் தமிழரசுக்கட்சியினராலோ அல்லது தமிழ்க் காங்கிரஸ் கட்சியினராலோ சமஅந்தஸ்து பெற்றுத்தர முடியுமா?''

நேற்று யாழ்ப்பாணம் பழைய பஸ்நிலையத்தில் நடைபெற்ற கூட்டாட்சி மேதினக் கூட்டத்திற்கு தலைமை தாங்கிப்பேசிய திரு. வி. பொன்னம்பலம் மேற்கண்டவாறு கூறினர்.

செந்நிற ஆடையணிந்த தொழிலாளர்களின் ஊர்வலம் நல்லூரிலிருந்து புறப்பட்டுபழையபஸ்நிலையத்தை வந்தடைந்தது.

தமிழரசுத்தலைவர் தமிழ் மக்களை ஏமாற்றுவதாக தமிழ்க்காங்கிரஸ் தலைவர் கூறுகிறுர், அதே வேளையில் தமிழ்க்காங்கிரஸ் தலைவர் தமிழர்களை ஏமாற்றுவதாக தமிழரசுத்தலைவர் கூறுகிறுர். இவர்களால் எத்தனை நூறு ஆண்டுகள் சென்றும் சம அந்தஸ்துப்பெற்றுத்தரமுடியுமா என்று கேட்டுக்கொண்ட திரு வி. பொன்னம்பலம் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் சமசந்தர்ப்பம் கேட்கும் நாம், சமசந்தர்ப்பம் பெற்று நாட்டில் ஒற்றுமையாக வாழ்க்கை நடத்துவோம். நாட்டிலுள்ள பெரிய தனியார் கம்பனிகளில் சிங்களவரும், தமிழரும் உயர் பதவி வகிக்கிறுர்கள். அங்கு தமிழ்மொழிக்கு சம அந்தஸ்து இல்லை. ஆனுல் சமசந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. அதே போல் இந்நாட்டில் சமசந்தர்ப்பத்திற்காக நாம் பாடுபடுவோம்.

இந்நாடுசிங்களமக்களுக்கு மட்டும் சொந்தமானதல்ல. தமிழர், பறங்கியர், முஸ்லீம்கள் ஆகியோருக்கும் சொந்தமானது. ஆதலினுல் சிங்களமக்கள் மத்தியிலுள்ள உழைக்கும் கூட்டத்துடன் கைகோர்த்து ஒரு சோஷலிச அரசை அமைக்கப்பாடுபடுவோம்.

இடதுசாரிகள் சமய விரோதிகள் என்று சிலர் கூறுகிறுர்கள். அதேவேளையில் புனிதமான வெசாக் தினத்திற்கு மதிப்புத்தர சிலர் மறுக்கிறுர்கள். இப்போ யார் சமயவிரோதிகள்? புனித வெசாக் தினத்திற்கு மதிப்புக்கொடுத்து, மேதினத்தை இன்றுகொண்டாடுவதில் என்ன தவறு?

ரஷ்ய கம்யூனிஸ்ட்கட்சியைச் சேர்ந்த திருவாளர்கள் இரத்தினவீரா, லங்கா சமசமாஜக்கட்சியைச் சேர்ந்த ஏ. விஸ்வநாதன், பி. நாகலிங்கம் ஆகியோருட்படப் பலர் பேசினர்.

### சென்னையில் நேற்று

# மாநகரசபை கூட்டத்தில் திமுக-காங்கிரஸ் கைகலப்பு

சென்னை, ஏப். 30

சென்னை மாநகராட்சிமன்றக்கூட்ட மொன்றில் தி. மு. க. உறுப்பினர்களுக்கும் காங்கிரஸ் உறுப்பினர்களுக்குமிடையே பலத்த வாக்குவாதம் ஏற்பட்டு கைகலப்பில் முடிந்தது. இதில் இரு தரப்பினரும் படுகாயமடைந்தனர்.

குடிதண்ணீர் பற்றுக்குறை சம்பந்தமாக எழுந்த வாக்குவாதத்திலிருந்தே இந்தக் கைகலப்பு ஆரம்பமானது. எதிர்க்கட்சித்தலைவர் திரு. குப்புசாமி கொண்டு வந்த பிரேரணையொன்றுக்கு தி. மு. க. உறுப்பினர் திரு. முருசாமி திருத்தப் பிரேரணை கொண்டு வந்தார். அவ்வேளையில் சபையில் கூக்குரல் எழுந்தது தி. மு. க. உறுப்பினர் திரு. கணேசன் இதற்கெல்லாம் காங்கிரசே காரணமென்று கூறினுர், இச்சமயத்தில் அங்கு ஏற்பட்ட பரபரப்பு கடைசியில் கைகலப்பில்முடிந்தது. 'கிளாஸ்'கள் மாறிமாறி வீசப்பட்டன.

கலம்பகத்தை அடக்க முடியாத நிலையில் மேயர் தமது இருப்பிடத்தைவிட்டு எழுந்து வெளியே செல்ல வேண்டிஏற்பட்டது. மாநகரசபைக்கூட்டங்களில் இவ்வாறு கைபரிமாறல் நடைபெற்றது இங்கு இதுவே முதல் தடவையாகும்.

## பிரான்ஸ் தேர்தலில் மேலும் ஒருவர்

பாரிஸ், ஏப். 30

பிரான்ஸ் அதிபர் தேர்தலில் முன்னுள் பிரதம மந்திரி திரு. பொம்பிடோவுடன், பிரான்ஸ் நகர பிதா ஒருவர் போட்டியிடப்போவதாகத் தெரிவித்துள்ளார். திரு. பொம்பிடோவுக்கு அதிக சந்தர்ப்பம் இருப்பதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரான்ஸில் நாணயமதிப் பிறக்கம் ஏற்படலாமென சர்வதேசவங்கியாளர் கருதுகின்றனர்.



'ஆடுகிறுன் என்னுள் பாடுகிறுன் கண்ணன் ஆனந்த ராதையுடன்' என்ற பாடலுக்கு அபிநயம் பிடிக்கிறுர் செல்வி கீதாஞ்சலி சிவாஜிதுரை.

பாரத மக்களினதும் ஈழ மக்களினதும் பாராட்டுக்களைப் பெற்ற செல்வி கீதாஞ்சலி வண்ணை ஸ்ரீ வேங்கடேஸ்வர வரதராஜப் பெருமாள் தேவஸ்தான நிதிக்காக இம்மாதம் 15-ம் திகதியன்று யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் தமது பரதநாட்டிய விருந்தையளிக்கிறுர்.

# நமது நோக்கு

இன்று சித்திராபௌர்ணமி. தாங்கள் செய்யும்நன்மைதீமைகளை எல்லாம் கணக்கு எழுதி வைப்பதாகக் கூறப்படும் சித்திரபுத்திரனுர் அவதரித்த இந்நாளை புனித விரதமாக இந்துப் பொது மக்கள் பயபக்தியுடன்அனுஷ்டிப்பர். கஞ்சிகாய்ச்சி நிவேதித்து அன்புடன் எல்லோருக்கும் அளிப்பதுண்டு. ஆனுல் இதைப்பலரும் மூட நம்பிக்கையென்று இக்காலத்தில் மறந்து வருகின்றனர்.

உலகத்துயர் யாவும் அன்பினுல்தான் நீங்குமென்று ஞானேதயம் பெற்று அறிவித்த புனிதன் புத்தர் பெருமான் அவதரித்த புண்ணிய தினமும் இதுவே. பௌத்த மக்கள் ஆங்காங்கே அன்ன தானங்களை கணக்கின்றி செய்து சிறப்பாகக் கொண்டாடுகின்றனர்.

பல இன்னல்களுக்கும் உட்பட்ட உலகத் தொழிலாளர் அனைவருக்கும் ஒற்றுமை மூலமே விமோசனம்கிடைக்கும் என்று அறிவுறுத்தும் மேவிழாவும் இம்முறை இதே நாளில் வருகின்றது. துரதிருஷ்ட வசமாக இன்று தொழிலாளர் பிளவுபட்டு பிரிந்து ஒற்றுமையின்றி இருப்பதால் எளிய தொழிலாளர் மனமுடைந்து, தங்கள் விமோசனத்துக்கு என்ன வழிஎன்று திகைக்கின்றனர். பசியும்பட்டினியும் எளிய மக்களை பயமுறுத்துகின்றன.

ஒவ்வொரு மதத்தவரும் வருடத்தில் ஏதோ ஒரு நாள் மட்டும், அதுவும் தம்சமயத்தவர்பாலே அன்புகாட்டி அன்ன தானங்கள் செய்து மறுநாள் அதையெல்லாம் மறந்து நேர்மாருக அன்பற்றுநடப்பதாயின் நமது துயரமெல்லாம் எப்படி நீங்கும்? நமது இன்பதுன்பங்களுக்கு நாமே தான் காரணமென்பதை உணர்ந்தும் எமது சுயநல ஆசைகள் அன்பை மறக்கச் செய்து கோணல் வழிகளில் நம்மைச் செலுத்துகின்றனவே என்ன செய்யலாம்?

நாம் செய்யும் நன்மை தீமை 'கணக்குகளை' யாரோ ஒருவன் எழுதி வருகின்றுன் என்ற நினைப்பு மறவாமல் இருப்பின் கூடுமானவரை நாம் தீமை செய்யாமல் கவனமாக இருப்போமல்லவா?

தியானத்தில் ஆழ்ந்திருந்து தமக்கு உள்ளும் புறமும் அருள் ஒளியைக்கண்டு அன்பின் ரகசியத்தை கண்டு பிடித்த புத்தர் பெருமானின் திருவுருவங்கள் எல்லாம் தியானம் செய்யும்பாவனையில் இருப்பதால் தியானத்தின் அவசியத்தை அந்த உருவங்கள் நமக்குக் கூறுமல் கூறி அறிவுறுத்துகின்றன.

தினசரி சற்றே தனித்திருந்து சிந்திப்பவர்கள் தங்கள் தவறுகளை உணர்ந்து அன்பு வழியில் செல்லக் கூடும்.

சுயநல ஆசைகளால் பிறரைத் துன்புறுத்தி வாழ்வது துன்பமே தருமென்றும் வினை விதைத்தவன் வினை அறுப்பான் என்பதையும் பிற உயிர்களுக்குச் செய்யும் நன்மை தீமைகள் நமக்கு நாமேசெய்து கொள்வதென்றும் நன்கு உணர்ந்து விட்டவர்கள் மீண்டும் தீங்கு செய்ய முற்படார்.

மூன்று மடங்கு புனிதமான இன்றைய தினத்தில் இதை ஓரளவாவது உணர்ந்து அதன்படி வாழ்க்கையைத் திருத்திக் கொள்வது தான் இந்நாளை உண்மையில் கொண்டாடுவதாகும்.

''தொழுது வணங்கி தூவி
த்துதித்துநின்று
அழுது காமுற்று ஆற்று
இன்றுரையும்
பொழுது போக்கி புறக்க
ணிப்பாரையும்
எழுதும்கீழ்க்கணக்கு இன்
னம்பர் ஈசனே.

—அப்பர் சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தர் வாழுகிறார்

— எஸ். பி. கிருஷ்ணன் —

மன்னன் மகனாகப் பிறந்து, அசரபோகத்தைத் துறந்தான் கௌதமன். அழகிய மனைவியும், அரண்மனையும், பொன்னும் பொருளும் இருக்க, இல்வாழ்வைத் துறந்தான்.

தொடர்ந்து துன்பப்படும் மனித இனத்தை, இன்பமாக வாழ வைக்க வழி தேடிச் சிந்தித்தான்.

சிந்தித்தான் கௌதமன்.
சிந்தனையின் விளைவு-
கௌதமன் புத்தனானன்!

முதுமை அவனை எட்டிக் கூடப்பார்க்காத வேளையிலே புத்தனானன். மன்னன் மகன் மக்கள் தொண்டனானன். மக்கள் ஒரு மகானைப் பெற்று மகிழ்ந்தனர்.

புத்தர் நல்ல மார்க்கத்தைப் போதித்தார். நலமே வாழ நல்ல வழிகளைப் போதித்தார். புதிய கருத்துக்களை, உன்னத அறிவுரைகளைப் போதித்தார். அன்பு வழி அவர் சொன்ன வழி.

புத்தர் காலத்திலேயே, அந்த அறிவுரைகளடங்கிய 'தம்மபதம்' எனும் நூல் பாலி மொழியிலே, வெளி வந்தது. 423 செய்யுள்களாலான நூல், புத்தரின் புது மொழிகளைச் சுருக்கித் தந்தது.

புத்தமதத்தினர் உலகெங்கும் வாழ்கிறார்கள். ஈழத்தில் புத்த மதம் பெருமளவில் வளருகிறது. வளருமளவிற்கு, புத்தரின் போதனைகளைப் பின்பற்றும் மக்கள் தொகை எவ்வளவு...?போற்றினல் மட்டும் போதுமா? புத்தமதத்தினரிடம் மட்டுமன்றி, பிறமதத்தினரிடமிருந்தும் பெறவேண்டிய விடை இது.

'தம்மபதம்' உயர்ந்த கருத்துக்களைக்கொண்ட, தத்துவப் போதனைகளைக்கொண்ட நூல்.

புத்தர் ஞான ஒளி பெற்ற நாளைக் கொண்டாடும் நாம் அவர் போதித்த கருத்துக்கள் சிலவற்றைச் சிந்தையிற் கொண்டு சிந்திப்போமாக.

இந்த உலகத்தில் வெறுப்பினல் வெறுப்பைத் தணிக்க முடியாது; அன்பைக்கொண்டுதான் முடியும். அதுதான் நிலையாக நிற்கும் தன்மையது.

'இவன் என்னுடைய மகன்; இது என்னுடைய சொத்து' எனக் கவலைப்படுபவன் ஒரு முட்டாள். அவனுடைய உயிரே அவனுக்குச் சொந்தமில்லாதிருக்கும் போது, மகனும் சொத்தும் எப்படி அவனுக்குச் சொந்தமாகும்?

பெரும் புயலினல் கற்பாறை அசைக்கப்படாததைப்போல, புகழுரையாலோ கண்டனத்தாலோ அறிவாளி பாதிக்கப்படுவதில்லை.

சோர்வும், சோம்பலும் கொண்டு நூறு ஆண்டுகள் வாழ்வதைக் காட்டிலும், நல்ல காரியத்தைச் செய்ய முயலும் ஒரு நாள் மேலானது.

முழுவதும் புகழப்பட்ட அல்லது முழுவதும் கண்டனத்திற்குள்ளான ஒரு மனிதன் இருந்ததில்லை; இருக்கவில்லை; இருக்கப்போவதில்லை.

தன்னடக்கம், நல்லொழுக்கம் உடைய நண்பன் வாய்க்கப் பெற்ருல், உன்னுடைய தொல்லைகளை மறந்து அமைதியாக அவனுடன் சேர்ந்து பிரயாணம் செய். அப்படியொரு நண்பன் கிட்டாவிடில் யானைக் கூட்டத்திலிருந்து தனியே பிரிந்து திரியும் ஒரு யானையைப்போல, ராஜ்யத்தைத் துறந்த ராஜனைப்போல தனியே பிரயாணம் செய்.

புத்தமதத்தினருக்கு மாத்திரமின்றி, மற்றைய மதத்தினருக்குமே வழிகாட்டும் பொன்மொழிகளாக இவை தோன்றவில்லையா? எனவே இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்குப் பின்பும், எங்கள் உள்ளங்களில் வாழுகின்றார். தான் புத்தர் இன்றும் வாழுகின்றார்.

# போதி மாதவன்

— அல்வை த. சுந்தரன் —

கொடுமிடர்க் காளாகி ஞாலம் - துன்பக்
கடலிலே மூழ்கிநின் றவலமுறு காலம்
சுடுதணற் புழுவாகி நாளும் - வாழ்க்கைச்
சுகமறி யாதுழன் றேநிதம் வாழும்!

பாவச்சு மைதாங்கித் தாங்கி - வாழ்க்கை
பாழ்பட்டு வாழ்வுற்ற நாள்முற்று மேங்கி
ஓய்வுற் றடங்கியுடல் வீங்கி - மண்ணுக்
குணவாகி மாய்கின்ற துயரென்ன தீங்கு

மீளமுடி யாதஇரு ளாமோ? - இந்த
மாயஉல காயஇதில் மாய்தல்வழி யாமோ?
நீளமிருள் நீங்கியிடா் போமோ? - வையம்
நீங்கமுடி யாததுய ருற்றழுவ தாமோ?

வகையொன்று மறியாது நின்று - இந்த
வையத்து உயிர்வாடும் வகைதன்னைக் கண்டு
முகில்கிழித் தொருசோதி யொன்று - வான
முகட்டிருந் தெமைக்காக்க வந்ததடி நன்று!

புத்தமுதத் தென்றலுமே வீசும் - வாழ்விற்
புது இன்பப் பொழுதொன்று புலர்ந்திதம்
பேசும்!
புத்தனெனும் ஞானஒளி வீசும் - நொந்து
புண்பட்ட நெஞ்சமது பண்பட்டு வாழும்!

அன்பென்ற தோர்பாதை காட்டி - உலகை
ஆதரித் திடுமினிய கருணைநெறி யூட்டி!
இன்பென்ற தோருலக மாக்கி - குடி
யேற்றிவைத் தானெந்தை இறைவனவ
னம்மா!

சொந்தமுயர் பந்தமிவை நீத்து - ஞானச்
சுடர்வீசி ஞாலத்து இடர்கூசக் காத்து
சந்ததமும் அன்புவழி நின்று - என்றும்
சாகாத பெருமன்புச் சரஞ்சூடி நின்றான்!

போதிமாதவனன்புத் தெய்வம்! - அறம்
போதித்த வழிசென்று புகழ்பெற்று உய்வம்
சோதிமா புத்தனருள் செய்வன்! - அவன்
சேவடியி லேபுரண் டின்பமலர் கொய்வம்!

சோதிபுத் தன்தந்த பாதை - சென்று
சுகவாழ்வு பெறஇல்லைக் கொடுமைபர்வாதை!
போதிமர ஞானஒளிக் காதை - பாடிப்
புத்தமுத முண்ணுத நாக்குபுண் ணுக்கு!

# தீண்டாமை: ஒரு மாபெரும் குற்றம்

தீண்டாமைக் குற்றத்தை நாம் செய்துள்ளோம். அந்த பாபத்தின் நியாயமான பலனை நாம் இப்பொழுது அனுபவித்துக்கொண்டு வருகிறோமல்லவா? எதை விதைத்தோமோ அதையே இன்று அறுவடை செய்து வருகிறோமல்லவா? நம் உற்றார் உறவினர்களிடத்திலேயே டயர், ஒட்வியர் கொடுமைகளை அனுசரித்து வந்திருக்கிறோமல்லவா? 'பறையர்'களை நாம் ஒதுக்கித் தூரத்தில் வைத்திருக்கிறோம். இதற்குப்பதிலாக நாம் பிரிட்டிஷ்காலனிகளில் ஒதுக்கித்தள்ளி வைக்கப்பட்டிருக்கிறோம். பொதுக் கிணறுகளில் தண்ணீர் எடுத்துக்கொள்ள அவர்களை அனுமதிக்க மறுக்கிறோம். நம் எச்சில் இலைகளில் மிஞ்சியதை அவர்களுக்குப்போடுகிறோம். 'பறையன்' நிழல் பட்டாலும் தீட்டு என்கிறோம். ஆங்கிலேயர் மீது நாம் என்னென்ன குற்றச் சாட்டுகளைக் கூறுகிறோமோ, அத்தனை குற்றச்சாட்டுகளையும் 'பறையர்'கள் நம்மீது சாட்டமுடியும்.

**களங்கம்**

ஹிந்து மதத்திற்கு இருந்து வரும் இந்தமாசைப்போக்குவது எப்படி? 'மற்றவர்கள் உனக்கு என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறாயோ, அதையே நீ மற்றவர்களுக்குச் செய்.' ஆங்கில அதிகாரிகளுக்கு நான் அடிக்கடி ஒன்று கூறிவருகிறேன். அவர்கள் இந்தியாவின் நண்பர்களும் சேவகர்களும் என்றால் தாங்கள் உயர்வானவர்கள் என்று எண்ணிக் கொண்டிருப்பதிலிருந்து அவர்கள் இறங்கிவர வேண்டும்; இந்தியருக்குத் தாங்களே போஷகர் என்பதை விட்டுவிடவேண்டும்; எல்லா வகையிலும் நாம் நண்பர்களே என்பதை காட்டிக் கொள்ளுவதற்காக அன்போடு கூடிய காரியங்களை அவர்கள் செய்யவேண்டும். சகோதர ஆங்கிலேயர்களைத் தங்களுக்குச் சமமானவர்கள் என்று எண்ணுகிறார்களோ, அதேபோல இந்தியர்களும் தங்களுக்குச் சமமானவர்கள் என்பதைஅவர்கள் நம்ப வேண்டும். பஞ்சாப், கிலாபத் சம்பவங்களின் அனுபவங்களுக்குப் பிறகு நான் இன்னுமொரு படி மேலே போய், செய்துவிட்டதவறுகளுக்காக அவர்கள் வருந்தி, தங்களுடைய மனப்போக்கையும் மாற்றிக் கொள்ளும்படி கேட்டிருக்கிறேன்.

**மாற்றிக்கொள்ளவேண்டும்**

அது போலவே, ஹிந்துக்களாகிய நாமும் நாம் செய்த தவறுகளுக்காகப் பச்சாதாபப்பட்டு, அவர்கள் விஷயத்தில் நம்முடைய போக்கையும் நடவடிக்கைகளையும் மாற்றிக் கொள்ள வேண்டியது அவசியமாகியிருக்கிறது. ஆங்கிலேயர்கள் அனுஷ்டித்த இந்திய அரசாங்க முறை எவ்வளவுமோசமான

## மகாத்மா காந்தி

தென்று நாம் நம்புகிறோமோ, அதே போன்ற பைசாசத்தனமான முறையால் நாம் தீண்டாதாரை அடக்கி ஒடுக்கிவைத்திருக்கிறோம். முகத்தில் அறைவது போல் அவர்களுக்காக ஏதோ ஒரு சில படுமோசமான பள்ளிக்கூடங்களை ஏற்படுத்துவது கூடாது. அவர்களை விட நாம் உயர்ந்தவர்கள் போல் நடந்து கொள்ளுவதும் கூடாது. நாம் ஒரே உதிரத்தில் ஊறிய சகோதரர் போல் அவர்களை நடத்தவேண்டும். உண்மையில் அவர்கள் அப்படித் தானே.

மற்றும் அவர்களிடமிருந்து நாம் பறித்துக் கொண்ட பரம்பரைஉரிமைகளை அவர்களிடமே திருப்பிக் கொடுத்து விடவேண்டும். இவ்விதம் செய்வது ஆங்கிலம் அறிந்த ஏதோ ஒரு சில சீர்திருத்தக்காரர்களின் நடவடிக்கைகளாக மாத்திரம் இருக்கக்கூடாது. ஆனல், மக்கள் தாங்களாகவே முன்வந்து மனப்பூர்வமாக அத்தகைய செய்கையில் ஈடுபடவேண்டும். முன்பே இந்தச் சீர்திருத்தம் ஏற்பட்டிருந்திருக்க வேண்டும். எனவே, இனியும் அதற்காக நாம் காலவரையின்றிக் காத்துக்கொண்டிருக்கும்படி நேரக்கூடாது. அநேகமாக இந்த ஆண்டிற்குள் அந்தச்சீர்திருத்தத்தை அமுலுக்குக் கொண்டுவர நாம் முயற்சி செய்ய வேண்டும். அதற்கான தவத்துக்கும் ஏற்பாடுகளுக்கும் பரிசோதனைகளுக்கும் இவ்வருடமே ஏற்றதாகும்.

(19-1-1921ல் 'யங் இந்தியா' பத்திரிகையில் வெளி வந்தது.)

# பிரம்ம தேஜஸ்ஸின் பெருமை

கதை ஆரம்பமாகிறது. அந்தச் சக்கரவர்த்தியின் பலத்தையும் ஆக்கிரமிப்பையும் எவ்வளவு அதிசயமாகக் குறிப்பிடுகின்றான் முனிவன்.

ஏனம் எனும் திறல்
மாவலி என் பான்
வானமும் வையமும்
வெளவுதல் செய்தான்

பலம் என்றதும் காட்டுப் பன்றியின்பலத்தையல்லவா ஞாபகமூட்டுகின்றான் கவிஞன். ஏன் அந்த உவமானம்? பூமியைத்தன்பல்லால் குத்தி எடுத்த அந்த மஹா விஷ்ணுவின் ஆதிவராக அவதாரமாகியமஹாபலத்தைத் தான் மஹாபலியின் பலத்திற்குக் குறிப்பிடவேண்டும். மஹாபலியின் வெற்றியே மஹாபலத்தில்தான் என்பதையும் உணரவைப்பதுவே கவிஞனின் நோக்கம்.

டிக்க விரும்புவதன்காரணம் தான் என்ன? மஹாபலியைத் தண்டிக்கத் திருமால் தனதுமஹாபலத்துடன் வந்தாரா? இல்லையே.

காலம் துணித்து உணர்
காசிபனுக்கும்
வால் அதிதிக்கும் ஓர்
மாமகவாகி
நீலநிறத்து
நெடுந்தகை வந்து (ஒ)ர்
ஆல் அமர்வித்தின்
அரும் குறள் ஆனன்

என்கின்றான், முக்காலம் உணர்ந்தமுனிவன். ஆம், காசிபன், சென்ற காலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகியமுக்காலமும்உணர்ந்த முனிவனல்லவா காசிபன் காஸ்யபருக்கும் அதிதிக்கும் பிள்ளையாக வந்து ஜனிக்கிறு

ஜீவராசிகட்கு நிழலும் கொடுக்கக்கூடிய தன்மைகளோடு,ஒருசிறுவிதைக்குள்ளே அடங்கிக்கிடக்கிறதல்லவா? எத்தனையோ கோடி வருஷங்கட்கு நிலைக்கப்போகும் தன்மைகளும் ஆலமரத்தின் அற்புததத்துவங்களும் அயர்ந்து அந்த

யிடம் போகின்றான் டாடுங்கள்.

முப்புரி நூலினன்,
முஞ்சியன், விஞ்சை
கற்பதோர் நாவன்
அனற்படு கையன்
அற்புதன், அற்புத
ரே அறியும்தன்
சிற்பதம் ஒப்பதோர்
மெய்க்கொடு சென்றான்

பூணூலும், புல்அரைஞாணுமாக வித்தை கற்பதிலேயே பழகிய நா. அந்த நா இப்போதுஒருவேதமந்திரத்தை அழகாக உச்சரித்துக்

சிறுவித்துக்குள்ளே கி_க்

கொண்டு போகிறதாம். அக்

இராமாயண இரசிகமணி
**ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள்**
(நல்லை ஆதீன கர்த்தர்)

**கம்பர் கவி விருந்து**

# ஈழத் தமிழனின் வீரவரலாற்றுக்கு பண்டாரவன்னியன் சிலை அவசியம்

வீரன் பண்டாரவன்னியனுக்கு யாழ்ப்பாண மாநகர சபை முன்றிலில் சிலை அமைக்கப்படவேண்டுமென கட்டுரையாளர் மாநகரசபையில் பிரேரணை கொண்டு வந்து அது ஏகமனதாக

நிகழ்ந்த கோரயுத்தத்தில் வீரபண்டார வன்னியனின் சேனைத் தளபதியான முனியப்பன் பிரித்தானியப் படையினரின் குண்டுக்கு இரையாகி வீரசுவர்க்கம் எய்தினன்.

தமிழ்நாட்டில் அறிஞர்



Noolaham Foundation. aavanaham.org

வீரன் பண்டாரவன்னிய னுக்கு யாழ்ப்பாண மாநகர சபை முன்றிலில் சிலை அமைக்கப்படவேண்டுமென கட்டுரையாளர் மாநகரசபையில் பிரேரணை கொண்டு வந்து அது ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது தெரிந்ததே.

நிகழ்ந்த கோராயுத்தத்தில் வீரபண்டார வன்னியனின் சேனைத் தளபதியான முனியப்பன் பிரித்தானியப் படையினரின் குண்டுக்கு இரையாகி வீரசுவர்க்கம் எய்தினன்.

தமிழ்நாட்டில் அறிஞர் அண்ணாவின் ஆட்சியில் வீரபாண்டிய கட்டப்பொம்மன், கப்பலோட்டிய சிதம்



## வி. சிவசுப்பிரமணியம்

(யாழ். மாநகரசபை உறுப்பினர்)

பதினெட்டாம் நூற்றாண்டில் ஒல்லாந்தர் இலங்கையைப் பிடித்துக் கரையோரங்களில் அரசு புரிந்து வந்த காலத்தில் கண்டியில் ஸ்ரீவிக்கிரமராஜசிங்கனும், வட இலங்கையில் வீரபண்டாரவன்னியனும் அரசாட்சி செய்துவந்தனர். எமது ஈழத் தமிழ்நாட்டை ஆண்ட அரசர்களுள் மிகவும் கீர்த்தியுடன் விளங்கியவன் வீரபண்டாரவன்னியன். அந்நியர் படையைத் தாக்கி அவர்களை அடிபணியச் செய்தவன் வீரபண்டாரவன்னியன். ஒட்டிசுட்டானுக்கு அருகாமையிலுள்ள முத்தையன்கட்டு என்னும் கிராமத்தில் இம்மன்னன் கட்டுவித்த கோட்டையையும், வெட்டுவித்த அகழிகளையும், குளங்களையும், நந்தவனத்தையும் இன்றும் காணக்கூடியதாயிருக்கிறது. திருவாத்திப்பூவையே இம்மன்னன் சிவபூசைக்கு உபயோகித்திருந்தான் என்பதை நம்பக்கூடியதற்குச் சான்றாக திருவாத்திச் சோலைகள் அங்கு இருப்பதை நாம் காணலாம்.

1776-ம் ஆண்டு பிரித்தானியர் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை ஒல்லாந்தரிடமிருந்து கைப்பற்றியபின், கண்டி அரசன் ஸ்ரீவிக்கிரமராஜசிங்கனும், வட இலங்கைத் தமிழ் மன்னன் வீரபண்டாரவன்னியனும் பிரித்தானியரைத் துரத்துமுகமாகப் படை எடுத்தனர். கண்டி அரசன் கடுகண்ணாவை, கலகெதரை, கடவத்தை மலைச்சாய்வுகள் வழியாகப் படையெடுத்து வந்து கொழும்பிலுள்ள பிரித்தானியப் படைகளைத் தாக்கிய அதே காலங்களில் வட இலங்கையிலுள்ள தமிழ் மன்னன் வீரபண்டாரவன்னியன் ஆனையிறவு, கோவில் வயல், பூநகரி ஆகிய இடங்களிலுள்ள கோட்டைகளைக் கைப்பற்றி, யாழ்ப்பாணத்திலுள்ள பிரமாண்டமான கோட்டையைத் தனது ஈழத்தமிழ் சேனையுடன் முற்றுகையிட்டுத் தாக்கினான். அப்பொழுது

பரம்பிள்ளை, பாரதியார், ஔவையார், திருவள்ளுவர், முதலியோருக்கு சமீப காலத்தில் சிலைகள் நாட்டியது யாவரும் அறிந்ததே. நமது விடுதலைக்காக பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து அவர்கள் சேனையைச் சரண்புகச் செய்த எமது அரசன் வீரபண்டார வன்னியனின் ஞாபகார்த்தமாக ஒரு சிலை தன்னும் அமைத்துக் கௌரவிக்க நாம் முன்வராதிருந்தது கவலைக்குரியதே. மாநகரசபை முன்றலில் சிலை அமைப்பதே பொருத்தமாகும்.

ஈழத்தமிழன் வட இலங்கையை வீரத்துடன் ஆண்டான் என்னும் உண்மையை நிலைநாட்ட இச்சிலை நாட்டப்படுவது அவசியம்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம், உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு"

இக் கைங்கரியத்தை செவ்வனே நடத்தி முடிக்க சரித்திர ஆராய்ச்சியாளர்களின் உதவியும், தமிழ் அரசியல் கட்சிகளின் ஆதரவும், தமிழ்ப் பத்திரிகைகளின் ஊக்கமும், மாநகரசபை உறுப்பினரின் ஒத்துழைப்பும், தமிழ் அபிமானிகளின் ஆசியும் எனக்கு நிச்சயமாகக் கிடைக்குமென நம்புவோம்.

ஐந்தாங்குரவர் ஆறுமுகநாவலர்

# இளமைக் கல்வியும் இரு மொழிப் புலமையும்

நம் ஐந்தாங்குரவர் ஓதாது உணர்ந்தவை அநேகம். முறையாகப் படிக்கச் செல்வார். அவருக்கு எவருக்குமில்லாதபடி அபார ஞாபகசக்தியுண்டு. ஒரு கவியை ஒருக்கால் கேட்டால் போதும். உடனே திருப்பிச் சொல்வார். எந்தச் செய்யுளையும் கசக்கிப் பிழிந்து சாரத்தையெடுப்பார். எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் 'பஞ்ச இலக்கணங்களையும் பொருத்திப் பார்ப்பார். ஆசிரியர்கள் ஆச்சரியப் பட்டுப் போவார்கள். இடைத்தர மாணக்கருக்குச் சொல்லிக் கொடுப்பார். துஷ்ட மாணக்கரை அடக்குவார். காலையிலும் மத்தியானத்திலும் அவருக்குப் போசனம் அவ்வளவு முக்கியமாயிருக்கவில்லை. மத்தியானம் வீடு வரும் போது உணவு ஆயத்தமில்லாதிருந்தால் அதைக் காத்திருக்கமாட்டார். திரும்பிப் போய்விடுவார். இரவில்தான் ஆர அமர உணவு உட்கொள்வார்.

பன்னிரண்டு வயதிற்குள் மற்றவர்களிடம் கற்கவேண்டிய தமிழ்க் கல்வியைப் பெருமானார் கற்றார். ஆனால் அவர் மற்றவர்களிடம் கேட்டுப்படித்தவை மிகக் கொஞ்சம். ஆனால் தானாகக் கற்றவற்றுக்கு அளவில்லை. அவர் தொட்ட ஏடுகள் வருமாறு:-

தொல்காப்பியம், நன்னூல், யாப்பருங்கலம், தண்டியலங்காரம், சூளாமங்கள், ஆகமங்கள், புராணங்கள்......

நாவலர் பெருமானுக்கு உபாசனமூர்த்திகள் நல்லூர் முருகப்பெருமான், செட்டியார் சிவன்கோவில் தட்சணமூர்த்தியாவர். இந்த சுவாமி கோவிலில் ஆறெழுத்து மந்திரம் செபித்து, திருமுருகாற்றுப்படையை நித்தியம் பாராயணம் செய்வார். சிவன் கோவிலில் பஞ்சாட்சர செபம் செய்வார்.

அறநெறிக் காவலர்

## முதலியார் செ. முத்துத்தம்பி

மணி நிகண்டு, பத்துப் பாட்டு, எட்டுத்தொகை, இறையனார் அகப்பொருள், திருக்குறள், காஞ்சிப்புராணம், திருக்கோவையார், சிலப்பதிகாரம், கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற்புராணம், தேவாரம், திருவாசகம், திருமந்திரம், சிவஞானபோதம் முதலிய மெய்கண்ட சாத்திரம் பதினான்கு, பின் வடமொழி தானாகவே கற்று வேதாக

முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கும் முருகப்பெருமானுக்குத் தமிழறிவை நிரம்பக்கொடுத்தார், சனகாதிமுனிவர் நால்வருக்கும் உபதேசஞ் செய்த தட்சணாமூர்த்தி வடமொழியறிவைக் கொடுத்துப் பேராசிரியனாக்கினார்.

நாவலர் பெருமானுக்குப் பன்னீராட்டைப் பருவம் முடியு முன்னரே தந்தைக்குப் பதிலாக விருந்த

மூத்த சகோதரன் தியாகராசபிள்ளையார் நாவலர் பெருமானுக்கு ஆங்கிலமும் கற்பிக்கவேண்டுமென் முடிவு செய்து அவரை கலாநிதி பீற்றர்பார் சிவலதுரை மகனார் அதிபராகவிருந்த மத்திய கல்லூரிக்கனுப்பி வைத்தார்.

ந்நாவலர் பெருமான் இலங்கை காவல் முதலியாரின் வழித்தோன்றல். கல்வி, செல்வம், ஒழுக்கம், கிராமாதிகாரம் அரசாங்க உத்தியோகமுள்ள பெருங்குடும்பத்தைச் சேர்ந்தவர், விபூதி, உருத்திராக்கம் அணிபவர். அந்தக் காலத்தில் விபூதி, உருத்திராக்கம் அணிந்துகொண்டு கிறிஸ்தவக் கல்லூரியில் சேர்ந்து கல்வி கற்க முடியாது. அப்படியிருந்தும் நாவலர் பெருமான் மத்திய கல்லூரியில் மாணவனாக அனுமதிக்கப்பட்டார். பதினாறு வயது முடியுமுன் ஆங்கிலமும் திறம்படக் கற்றுத் தேறினார்.

(தொடரும்)

மஹாபலத்தில்தான் என்பதையும் உணரவைப்பதுவே கவிஞனின் நோக்கம்.

## கம்பர் கவி விருந்து

ஆனால் இந்த மஹாபலசாலி மஹாபக்தனாகவும் இருந்தான். அதுவும் மஹாவிஷ்ணுபக்தன். அந்த பக்தன் மஹாவிஷ்ணுவின் ஆராதனமாகவே ஒரு யாகத்தை ஆரம்பிக்கின்றான். தன் பலம் கொண்டு சம்பாதித்த பொருள்களை அந்த யாகத்தில் அந்தணர்கட்குத் தானம் வழங்குகின்றான். வீரசக்கரவர்த்தி மஹாவீரனாகவும், மஹாபக்தனாகவும் மஹாவள்ளலாகவும் விளங்குகின்றான். ஆனால் தேவர்களோ இந்த தவச்சோலைக்கு வந்து தவக்கோலத்திருந்த திருமாலை வணங்கி விண்ணப்பம்செய்கிறார்கள்.

"தீயவன் வெந்தொழில்
தீர்" என நின்றார்:
நாயகனும் அது
செய்ய நயந்தான்

மஹாபலசாலியும் சக்கரவர்த்தியும் பக்தனும் கொடையாளியும் ஆகிய மஹாபலியைத் 'தீயவன்' என்று ஏன் குறிப்பிடவேண்டும்? கொடைத்தொழிலும் கொடும்தொழிலா? தேவர்கள் சொன்னதைத் திருமாலும் ஒப்புக்கொண்டு தன் பக்தனைத்தான் தண்

என்கின்றான், முக்காலமும் உணர்ந்தமுனிவன். ஆம், காசிபன், சென்றகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகியமுக்காலமும்உணர்ந்த முனிவனல்லவா காசிபன் காஸ்யபருக்கும் அதிதிக்கும் பிள்ளையாக வந்து ஜனிக்கிறாராம். திருமால் குறள் வடிவமாக-அதாவது குள்ளவடிவமாக. குள்ளப்பிள்ளையாக வன்றி மஹாபலியைவஞ்சிக்கும் கள்ளப் பிள்ளையாகவும் ஜனிக்கிறார். நீலநிறத்து நெடுந்தகை ஆகிய அதே விஷ்ணு, குள்ளனாகிக்குறுகிப் போய்விட்டாராம்.

ஆலவிருக்ஷம் தன் கிளைகளோடும் விழுதுகளோடும் எத்தனையோ பறவைகட்கு உணவும் எத்தனையோ

சுவாமிகள்

(நல்லை ஆதீன கர்த்தர்)

சிறுவித்துக்குள்ளே கிடக்கின்றனவாம். அது எப்படியென்றால், அண்டகோடிகளெல்லாம் வியாபித்திருக்கும் அற்புத சக்தி எல்லாம் அந்தக் குறள்வடிவத்துள் அடங்கிக்கிடக்கின்றதாம்.

நீலநிறத்து
நெடுந்தகை வந்(து)ஓர்
ஆல் அமர் வித்தின்
அருங்குறள் ஆனான்

என்றான் கவிஞன்-பிரம்மசாரி வேஷத்திலுள்ள இக்குள்ளன் எப்படி மஹாபலி

கொண்டு போகிறதாம். அக்கினி வளர்க்கும் அந்தக் கையை வீசிக்கொண்டு போகின்றானும். பகவானுடைய இந்தச் சிறியஉருவத்திற்கு பகவானுடைய சித்சொருபம் என்றசூட்சுமமான ஞானசொரூபத்தை உபமானமாக்குகின்றான் முனிவன். ஏன் மேனி எங்குமே ஞான ஒளிவீசுகிறதாம். பிரம்மதேஜஸ்ஸின் பெருமையே பெருமை.

(தொடரும்)

# பாட்டாளியின் சுதந்திரத்துக்கு வித்திட்ட பொன்னாள் மே தினம்

குடும்ப விழாக்கள் வீட்டுடன் குதூகலத்தை தருகின்றன. இலக்கிய விழாக்கள் அமைத்து இனங்கள் இன்பம் பெறுகின்றன. தேசிய விழாக்கள் நாட்டின் எல்லையுடன் நின்றுவிடுகின்றன. ஆனால் மேதினமோ, இன, மத, மொழி, நிற பேதங்கள் கடந்து நாடுகள் அனைத்திலும் வியாபித்து ஓருலக நெறிதன்னை மறைமுகமாய் உணர்த்தும் வகையில் மனிதகுலத்தின் மாபெரும் விழாவாகத் திகழ்கின்றது.

ஐக்கிய அமெரிக்க ராஜ்யத்தில் அன்று பெரும் ஆரவாரமத்தியில் உரிமைக் கொடியுயர்த்தப்பட்டு, பொருள் உற்பத்தியில் ஈடுபட்ட பாட்டாளிகள்பவனி வந்தனர். பல நூறு ஆண்டுகளுக்கு முன்னர், முதலாளித்துவம் மனித குலத்தை முழுமையாகஅடிமைகொண்டிருந்தது. தொழில் துறையில் முன்னேறிய ஐரோப்பிய அமெரிக்க நாடுகளில் பன்னிரண்டு, பதினாங்கு, பதினாறு மணிநேர வேலை கூட ஒரு நாளில் வாங்கப்பட்டது. மனிதன் ஓர் உற்பத்திக் கருவியாக ஆற்றலை விற்கும் ஒரு பண்டமாகக் கருதப்பட்டிருந்த காலம் அது. ஆலைமுறை உற்பத்தியின் கைக்கருவியாக மனிதன் பயன்படுத்தப்பட்டான். தாயாகக் காத்திருந்த தங்கையர், பச்சிளம் பாலர்கள், உழைக்கமுடியாத முதியோர்கள் வேலைக்கமர்த்தப்பட்டிருந்த காலமது.

அந்த வேளை இந்த மனிதன்தான் வெறும் கருவியல்லவென்றும் தனக்காகவே உற்பத்தி நிகழ்கிறதென்றும், அவனாலேயே உற்பத்தி பெருகுகிறதென்றும் மனிதாபிமானம்மிக்க சிந்தனைச் சிற்பிகளின் உள்ளத்தில் உண்மை சுடர்விட்டுப் பிரகாசித்தது. உயிர் உள்ளவன் மனிதன். அவனுக்குஉணர்வுண்டு. அவன் தன் மானத்துடன் தொழில் செய்து பிழைக்கவிரும்புகின்றான் என்ற பேருண்மை உணரப்பட்டது. நிலமும் ஆலையும் போக்குவரத்துச் சாதனங்களும் வங்கியும் எவனுக்குச் சொந்தமோ அவனே சமூகத்தின் அரசன் என்ற நிலை மாறி 'பாடுபட்டு, மாடுபோல் உழைத்திடும் மக்கள் வாழ்வில் மாற்றம்எந்நாள்வரும்' என்ற வினா எழுப்பப்பட்டது. குமுறுமிதயங்கள் கொப்பளிக்கும் எரிமலைகளாக மாறின. சிகாகோ நகரில் 'எட்டுமணி நேர வேலை' என்றகுரல் கொடுக்கப்பட்டது. இந்தநிலைகண்டு அமெரிக்க முதலாளித்துவம் ஆத்திரமடைந்தது. கேவலம் அடிமைத் தொழிலாளிக்கு இத்தனை இறுமாப்பா என்று ஐக்கிய அரசு ஆவேசப்பட்டது.

உழைக்கும் நாளை எட்டு மணித்தியாலமாகக்கட்டுப் படுத்த வேண்டுமென்ற கோரிக்கை எழுந்ததனால் நாமின்று அதன்பலனை அனுபவிக்கின்றோம். அன்று சிகாகோ வீதிகளில் உயிர் துறந்த தொழிலாளர்கள் பிறர் வாழத் தம் இன்னுயிரைத்தாரை வார்த்ததன் பயன்தான் இன்று நாம் பெற்றிருக்கும் எட்டு மணி நேர வேலை. அமெரிக்க அரசின் ஆணைப்படி பாட்டாளிகளுக்கு எதிராக அன்று பட்டாளம் அணிவகுத்தது. முதலாளித்துவ அரசின் தூண்டுதலால் துப்பாக்கிகள் அதிர்ந்தன. உழைத்துழைத்து உருக்கென முறுக்கேறிய தசை நார்களின் பலத்தைப் பரிசோதிக்கும் வகையில் தொழிலாளர்களின்உடலைத் துப்பாக்கிக்குண்டுகள்துளைத்தன. உதிரம் தோய்ந்த உடைகள் தியாகத்தின் சின்னமாக, உலகத்தார்

## வ. பொன்னம்பலம் எம். ஏ.

(5ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தர் ஞானம்:

# உலக துன்பங்களுக்கெல்லாம் ஆசையே ஆணிவேர்

உலகை உய்விக்கும் நெறி தேடி அலைந்த புத்தர் கடைசியில் உண்மையைத் தெரிந்து கொண்டார். ஆசையொன்றே உலக துன்பங்களுக்கெல்லாம் காரணமென்றுப் அதனைத் துறந்தால் உலகினைத் துன்பம் அணுகாதென்றும் அவர் கண்டார்

## இன்று சித்தார்த்தன் ஞான ஒளிபெற்ற தினம்

— நிலமெ பி. ரணசிங்ஹ —

உலக வரலாற்றில் ஒளி மிக்க காலத்தின் உதயம் எனக் கருதப்படுகின்ற கி. மு. 6-ம் நூற்றுண்டில் உலகின் பல பாகங்களிலும் மக்களை நன்னெறியில் இட்டுச் செல்லும் பெரியார்கள் வாழ்ந்தார்கள். இதே காலத்தில் பூரண ஞானம் பொலிந்த பழம் பெரும் பாரத நாட்டின் வடபகுதியில் பகவான் புத்தர் அவதரித்தார். புத்த பெருமானது பிறப்பும் ஞான ஒளி பெற்று புதிய மார்க்கம் ஒன்றை மனித வர்க்கத்தின் நலன் கருதி நிர்மாணம் செய்ததும் இந்திய சமய, சமூக, கலாச்சார வரலாற்றிலே மாத்திரமல்ல, உலக வரலாற்றிலே ஒப்பற்ற நிகழ்ச்சியாகும். இந்நிகழ்ச்சி நடைபெற்று 2512 ஆண்டுகள் சென்றுவிட்டபோதிலும் அழியாது பெரும் சமயமாக நிலைபெற்று அகில உலகத்திலும் 60 கோடி மக்களால் பௌத்த நெறி பின்பற்றப்பட்டுவருகின்றது.

உலகினைச் சூழ்ந்திருந்த அறியாமைத் திரையைக் கிழித்து உண்மையினை உணர்த்தி உலகை உய்விக்க நெறிவகுத்த உண்மைஞானி புத்தர். தனக்கென வாழாப் பிறர்க்கென வாழ்ந்த தருமசீலன் அவர். மனிதராய் அவதரித்துத் தெய்வமாய்த் திகழ்ந்த அன்னரது பெருநெறியினைப் பேணிய அசோக மாமன்னன் புவியெங்கும் பௌத்த நெறி பரவப் பாடுபட்டார்.

'சித்தார்த்தர்' எனச் சிறுவயதில் நாமம் பெற்ற நம் பகவான் புத்தர் நேபாளத்தில் அரசோச்சிய சுத்தோதனனின் செல்வக் குமாரன்.

தன் தன்னை ஈன்று உலகிற்கீந்த அன்னையை ஏழு நாட்களுக்குள்ளாக இழந்து செவிலித்தாயின் அரவணைப்பில் வாழ்ந்தார். சிறு வயது தொடக்கம் சகல உயிரினங்கள் மீதும் அன்பு காட்டும் சிந்தையும், எல்லாவற்றையும் விட ஒரு ஞானிக்கு உரிய ஆழ்ந்த சிந்தனையும். அமைதியும், அடக்கமும் அவரிடம் காணப்பட்டன.

தனது ஒரே குல முதலான சித்தார்த்தனை உலகம் போற்றும் சக்கரவர்த்தி ஆக்கவேண்டும் என சுத்தோதன மன்னனுடைய மனம் விளைந்தது. ஆனால் பிறவியிலே பேரருளைப் பெற்றுப் பிறந்த சித்தார்த்தனது சிந்தை உலகப் பற்றுக்களில் ஈடுபடாது உண்மைப் பொருளையே நாடி நின்றது. தனயனின் இத்தகைய போக்கினைக் கண்ட தந்தையின் சிந்தையில் பெரும் துன்பம் ஏற்பட்டது. உலகப்பற்றுக்களில் சித்தார்த்தனது உள்ளத்தை ஒட்டவைப்பதற்காக துன்பம் துளியளவும் அற்ற இன்பமே நிறைந்த எழில் மிக்க சூழ் நிலையில் சிறப்புடன் சித்தார்த்தனை வளர்த்ததோடு பெண்களுக்குள்ளே பெருவடிவினையுடைய யசோதராவைத் திருமணம் செய்து கொடுத்தார்.

முதன் முறையாக வாழ்வின் துன்பத்தைப் பிரதிபலிக்கும் வயோதிப மனிதன், நோயாளி என்போரையும் வாழ்வின் நிலையாமையைப் பிரதிபலிக்கும் பிணத்தையும் கண்ட சித்தார்த்தனது உள்ளம் குழப்பமாகியது. துன்பத்தில் வாடியவர்களை நினைத்து அவர் மனமும்

மாற்றும் மார்க்கம் காண வேண்டும்; இவ்வுலகத் துன்பத்தினின்றும் மக்கள் விடுபடவேண்டும் என்ற எண்ணம் வலுவாக அவர் உள்ளத்தில் இடம் கொண்டது. உண்மைப் பொருளைத் தேடி அலையும் துறவியைக் கண்ட போது தானும் இவ்வாழ்வைத் துறந்துவிட வேண்டும் என்று முடிவு செய்தார்.

உண்மையைக் காணவேண்டும் என உறுதி கொண்ட சித்தார்த்தன் இவ்வுலக வாழ்க்கை, அரச சுகபோகமெல்லாம் நிலையற்றது என்று உணர்ந்தார். நிலையற்ற இவ்வற்ப வாழ்க்கை பெரும் செல்வம், அழகே உருவான மனைவி, சிந்தைக்கினிய செல்வக் குமரன் அனைத்தையும் தமது இருபத்தொன்பது வயதிலேயே துறந்து உண்மைப் பொருளைத் தேடி-உலகை உய்விக்கும் நெறியினைத் தேடி-அலைந்தார். இந்து மத ஆசாரியர்களிடம் இந்துமத தத்துவங்களையும் தர்மங்களையும் ஆராய்ந்தும் தம் பிரச்னைக்குத் தெளிவு கண்டாரில்லை. உடலை வருத்தி உண்மையைக் காணும் பாதையிலும் வெற்றி கண்டாரில்லை. ஈற்றில் அரச மர நிழலில் ஆழ்ந்த சிந்தனையில் அமர்ந்த சித்தார்த்தன் ஞான ஒளி பெற்று உலகின் சகல இன்னல்களுக்கும் ஆசையே காரணமென்ற அசையாத முடிவுக்கு வந்தார். 'ஆசையென்ற உணர்வுதான் நம் இன்னல்கள் அனைத்தினதும் வித்து; இவ்வித்திலிருந்துதான் பிறப்பும் துன்பமும் பெருகுகின்றன; பிறப்பினைத் தொடர்ந்து சாக்காடு வளர்கின்றது; இவ்வுலக வாழ்வில் இன்பங்களை அனுபவிக்க ஆசை கொள்ளும் ஆன்மாக்கள் அவை கிட்டாத பொழுது துன்பத்தை அடைகின்றன;

# ஓ, பூக்கள் விழுகின்றன!

சிறுகதை

பெரி சண்முகநாதன்

ஒருபடியாக மியூஸியத்திலிருந்து வெளியேறிய போது மணி பன்னிரண்டரையாகிவிட்டது. எனக்கு இலேசாய்த் தலையை வலித்தது. நான் பல தடவை பார்த்துச் சலித்துப்போன மியூஸியம்தான். ஆனால் மருமகன் ஒருவன் ஊரிலிருந்து விடுமுறையைக் கழிக்கவெனக் கொழும்புக்கு வந்திருந்தான். 'மியூஸியம், ஸூ, கோல்பேஸ்' என்ற வழக்கமான பட்டியலையே இவனும் வாசித்தான். இப்போது மியூஸியம்மட்டுந்தான் முடிந்திருக்கிறது.

மருமகன் பரமசாது. வீணாய்க் கேள்விகளைக் கேட்டுத் 'தொண தொண'வென்றிராது, தானாகவே எதையும் அறிய முயன்றான். ஆனால் தெரியாத்தனமாக எனது இளைய 'செல்வ'மான ஜனனியையும் என்னுடன் இழுத்துக்கொண்டு வந்திருந்தேன். அவளுக்கு வயது ஐந்துதான். ஆனால் ஐந்து நிமிடத்திற்குள் ஐம்பது கேள்விகளைப் போட்டு அலைக்கழித்துவிடுவாள். ஒரு சொல்லில் பதில் சொல்லி அவளிடமிருந்து தப்பிவிடவும் முடியாது. எல்லாவற்றையும் சவிஸ்தாரமாய் விளக்கிச் சொல்லவேண்டும் அவளுக்கு. ஜனனியின் 'பெரிய வாயினை' அவளது அப்மாவுடன் சேர்ந்து சில சமயங்களில் மெச்சுவது உண்டென்றாலும், சிலவேளைகளில் எனக்குத் தலையைப் பிளந்துவிடும்: இன்று ஜனனிக்குப் பதில் சொல்லிச் சொல்லி எனக்கு வாய் வலித்துப்போய்விட்டது.

வீட்டுக்குப் போகவேண்டிய பஸ்ஸில் ஏற அடுத்த வீதிக்கு நடக்கவேண்டியிருந்தது. வெய்யில் நெருப்பாய் எரிந்துகொண்டிருந்தது. பசி வேறு வயிற்றைப் பிராண்டிக்கொண்டிருந்தது. ஜனனியைக் கையில் பிடித்திழுத்தவாறே அடுத்த வீதியில் கால் வைத்தேன்.

''அப்பா! இந்த ரோட்டு முழுவதும் கனக்கக் கனக்கப் பூக்கள் இருக்குதேயப்பா..''- ஜனனி ஆரம்பித்துவிட்டாள்.

அது மே மாதம். அந்த வீதி நெடுகப் பூ மரங்கள்தான் நிற்கின்றன. இந்த மாதத்தில் அந்த வீதி ஒரு பேரெழிலுடன்தான் காட்சி தரும். 'பிரபல புள்ளி'களின் பெரு... மாடி வீடுகளினுல் நிறைந்திருக்கும் இந்த அமைதியான சூழலிடையே அமைந்திருந்த இந்த வீதி பாரிய மலர்மரங்களிடையே செல்வதால்தானோ என்னவோ அதற்கு 'பிளவர்'

மரமனைத்தும் நிரவியிருந்தது.

''அப்பா, அது எவ்வளவு வாடியிருக்கப்பா..,'' என்று நாக்கில் நீரூறியதுபோல வாயை உறிஞ்சிக்கொண்டே ஜனனி சொன்னாள்.

அந்த வழியால்தான் நான் தினமும் வேலைக்குப் போகிறவன். ஆனால் இப்போதுதான் அந்த மரத்தைக் கூர்ந்து பார்த்தேன். உண்மையில் அந்த மரம் எவ்வளவு அழகாயிருக்கிறது!

நீலவானப் பின்னணியில் ஓர் இளஞ்சிவப்பு மலர்மாலை போல...அதிலிருந்து ஒவ்வொரு சிறு பூவும் உதிர்ந்து உதிர்ந்து கீழே விழுந்து கொண்டிருந்தது. 'செர்ரி புளொஸொம்' மரம் பூத்தால் அப்படித்தான். எந்நேரமும் அதிலிருந்து இடையறுது பூக்கள் சொரிந்து கொண்டேயிருக்கும்.

''அப்பா, அந்தப் பூக்கள் ஒண்டொண்டாய் விழுகின்றதைப் பாருங்கோ... நானும் அக்காவும் வீட்டில் சவுக்காரத் தண்ணியிலை பப்பாக்குழலை வைத்து ஊதினால் வட்டக் குமிழ்விடும்... அந்தக்குமிழுகள்மாதிரி ஆடி ஆடிப் பறக்குதுகள்..'''

நான் ஜனனியைப் பார்த்தேன். ஏதோ ஒரு வித ஆனந்த பரவசத்தால் சிலீரென முகஞ் சிவந்துபோயிருந்தாள். ஆவல் தோய்ந்த அவளது கண்கள் அந்தச் 'செர்ரி புளொஸொம் மரத்தின்மீதே நிலைத்திருந்தது.

மணி ஒன்ருகிவிட்டது.... இன்னும் பஸ் வந்தபாடில்லை. வியர்வை சேட்டினை உடலுடன் ஒட்டச் செய்து கிச்சு மூட்டியது. முன்னலிருந்த பஸ்தரிப்பில் நி...ற பாடசாலைச் சிறுவர்கள் கேலியும், பேச்சுமாய்க்குதித்துக் கொண்டிருந்தனர்.

''அப்பா, அந்த அவன்களைப்பாருங்கோ ... விசரன்கள்...நிலத்திலை கிடக்கிற அந்தச் சின்னப்பூக்களுக்கு மேலை நிண்டு துள்ளுறுங்கள்...பூக்கள் நசியுது... பாவம் பூக்கள்...அவன்களுக்கு மூளையே இல்லை அப்பா...'' - ஜனனியின் குரலில் சொரிந்து கிடந்த பூப் படுக்கைமேல் குதிபோட்டுக் கொண்டிருந்த சிறுவர்கள் பால் அவளுக்கிருந்தவெறுப்பும், கோபமும் ஒருங்கே கரைந்து வழிந்தன. எனக்கு ஏனே அந்தச் 'செர்ரி புளொஸொம்' மரத்திலிருந்து ஜனனியின் கவனத்தைக் கலைக்கவேண்டும் போலிருந்தது.

''அவங்கள் விசரன்கள் தான்...நீ பேசாமலிரு ஜனு...' என்று சொன்னேன். சிறிதுநேரம் பேசாமலிருந்த அவள், மீண்டும் ''அப்பா!'' என்றாள்.

நான் ஜனனியைப் பார்த்தேன். மிகுந்த கலவரத்தோடு அந்தச் 'செர்ரி புளொஸொம்' மரத்தைப் பார்த்தபடியே ஜனனி சொன்னாள்: ''அப்பா, அந்தப் பூக்களைப் பாருங்கோ... கடகடவென்று எல்லாம் விழுந்து கொண்டிருக்குதுகள். இப்பிடி விடாமல் ஒரேயடியாய் விழுந்து கொண்டிருந்தால் ... ஐயோ ...மூண்டு மணிக்கு முதல்எல்லாப் பூக்களும் நிலத்திலை கிடக்கும். பிறகு மரத்தைப் பார்க்க...சீ, எவ்வளவு வடிவில்லாமலிருக்கும் ... ஏன் இதுகள் இப்படி அவசரப்பட்டு விழுகுதுகளோ...?''

ஜனனியின் முகத்திலும், குரலில் விவரிக்க முடியாத விசனம் பெருகி வழிவதை என்னுல் அவதானிக்க முடிந்தது. 'சே! இவளேன் அந்த மரத்தைப் பார்த்தாள்' என்று எண்ணினேன்.

''இல்லை ஜனு, பூக்கள் எல்லாம் விழாது...'' என்று நான் வாயெடுக்கு முன்னரே ஜனனி குறுக்கிட்டுக் கத்தினுள்: ''இல்லை...என்னை நீங்கள் ஏமாத்திறீங்கள். இண்டைக்கு இரவைக்குஎல்லாப் பூக்களும் நிலத்திலை கிடக்கும். மரத்திலை வெறும் பச்சை இலைகள்தான் கிடக்கும்...ஐயோ ... இந்தப் பூக்கள் ஏன்இப்பிடி அவசரமாய் விழுகுதுகள்...''

''இல்லை ஜனு, இரவைக்கு புதுப்பூக்கள்வரும்... நாளைக் குக் காலையில் இன்னும் வடிவாயிருக்கும்!'' என்றேன் நான்.

''பொய் ... பொய் ... !''- ஜனனி மீண்டும் கத்தினுள். எனக்கு ஆத்திரமாய் வந்தது. ''பேசாமல் இரடி!'' என்று குனிந்து அதட்டிக்கொண்டே அவளை என் பக்கம் திருப்பவும் பஸ் வரவும் சரியாயிருந்தது.

ஜனனியையும், மருமகனையும் இழுத்துக்கொண்டு பஸ்ஸில் ஏறிக் கொண்டேன். கீழ்தட்டில் நெரிசலாயிருந்தது. மேல்தட்டினுக்குஏறிக் கொண்டோம். பஸ் ஜன்னலூடாகவும் ஜனனி அந்தச் 'செர்ரி புளொஸொம்' மரத்தையே பார்த்துக்கொண்டிருந்தாள். பஸ் நகர்ந்து அடுத்த வீதித்திருப்பத்தில் திரும்பும் வரையில் தலையைத் திருப்பிக்கொண்டு ஜனனிஅந்தப்பூமரத்தையே பார்த்துக்கொண்டிருந்ததை நான்கவனிக்கத்தவறவில்லை. திருப்பத்தில் பஸ் திரும்பிக்கொண்டதும் ஜனனி முன்புறம் திரும்பிக் கொண்டாள். அவளது கண்கள் கண்ணீரால் முட்டிப் போயிருந்தன. எனது மனதை எதுவோ நெருடியது. இவளின் மனம் ஏன் இப்படி அலைபாய்கிறது என வியந்தேன். இவளை ஏன் கூட்டிவந்தோம் என்று பட்டது. எதையும் கவனிக்காதவன் போல பேசாமலிருந்தேன்.

★

வீட்டில் ஜனனி சாப்பிடவில்லை. 'கண்ணெல்லாம் எரியுது' என்றாள். தொட்டுப் பார்த்தேன். காய்ச்சல் லேசாய்க்காய்ந்தது. போய்ப் படுக்கச்சொன்னேன்.

அறையினுள் கட்டிலில் படுத்திருந்த போதும் தாயைப் பக்கத்தில் படுக்கச் சொல்லிவிட்டு அந்தச் 'செர்ரி புளொஸொம்' மரத்தைப் பற்றிக் கேள்விகள் கேட்க ஆரம்பித்துவிட்டாள். ''அம்மா, பூக்கள் எல்லாம் விழுந்து போனுல், மரம் வடிவில்லாமலிருக்குமே...'' என்று ஏக்கத்துடன் அடிக்கடி சொல்லிக் கொண்டாள்.

''செர்ரி புளொஸொம்மரமென்றால் அப்படித்தான். பூவெல்லாம் கொட்டியபடியே இருக்கும். பிறகு புதுப்பூக்கள்வரும்'' என்று அம்மா எவ்வளவோ சமாதானம் சொன்னாள்.

ஆனால் ஜனனி எதையும் நம்புவதாயில்லை. இன்றுடன் அந்த மரத்திலுள்ள பூக்களெல்லாம் விழுந்து முடிந்துவிடும்; இனிமேல் அங்கு பூவே இருக்கப்போவதில்லை என்றமாதிரித்தான் எண்ணினாளோ என்னவோ, அந்தச் செர்ரி புளொஸொம் மரத்தைப் பற்றி அடிக்கடிபேசிப் பேசிக் கலங்கிக்கொண்டிருந்தாள்.

மாலையில் மழையும், காற்றும் பெரிதாய் வந்துவிட்டன. ஜனனிக்குக் காய்ச்சல் நெருப்பாய் எரிந்தது. போர்வையினுள் கிடந்தபடியே இடையிடை அந்தச் செர்ரி புளொஸொம் மரத்தைப் பற்றி அரற்றிக்கொண்டிருந்தாள். எனக்குப் பெரிய கவலையாய்விட்டது. அவள் பக்கத்தில் அணைந்துபடுத்துக் கொண்டேன். அவ்வப்போது சமாதானம் சொல்லியவாறே அவள் எப்படியாவது நித்திரையாகிவிட வேண்டுமென்றுபிரார்த்தித்துக் கொண்டேன்.

(4-ம் பக்கம் பார்க்க)

வில்லை. கேட்டால் ஒருவேளை

களைக் கோலி எடுத்து கை

அவரிடம் ஐந்துசதத்தைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org

... பாடுபட்டார்.

‘சித்தார்த்தர்’ எனச் சிறு வயதில் நாமம் பெற்ற நம் பகவான் புத்தர் நேபாளத்தில் அரசோச்சிய சுத்தோதனனின் செல்வக் குமரன். சித்தார்த்தன் என்பதன் என்பதன் அர்த்தம் ‘தன் குறிக்கோளை அடைபவன்’ என்பதாகும். தன் குறிக்கோளை அடையும் சித்தார்த்... வாழ்வின் நிலையாமையைப் பிரதிபலிக்கும் பிணத்தையும் கண்ட சித்தார்த்தனது உள்ளம் குழப்பமாகியது. துன்பத்தில் வாடியவர்களை நினைத்து அவர் மனமும் வாடியது. ஆனால் இத்துன்பத்துக்குரியகாரணம் என்ன என்பதைத் தெரியாது கலங்கி நின்றார். மனித இனத்தின் மாறாத துன்பத்தை ...வுலக வாழ்வில் இன்பங்களை அனுபவிக்க ஆசை கொள்ளும் ஆன்மாக்கள் அவை கிட்டாத பொழுது துன்பத்தை அடைகின்றன; இந்த ஆசைக்கு அளவில்லை; இவ்வகிலம் அனைத்தினையும் கட்டி ஆளினும் வளரும் ஆசையானது துன்பத்தையும் தன்னுளடக்கியே வளரும்; உலகில் துன்பம் உண்டென்றால் அதற்குக் காரணம் ஆசையே, என்று தர்க்க ரீதியாக உண்மையையாராய்ந்து, பிரச்னைகளுக்கு மாற்றுக்காணும் நெறியினை பெருமான் புத்தர் வகுத்தார்.

‘‘மனித வாழ்வின் குறிக்கோள் இந்தத் துன்பத்தில் இருந்து விடுபடுவதே. எனவே ஆசையை ஒழிக்க வேண்டும். அதன் பயனாகச் சாந்தியைப் பெற முடியும்’’ என்று வற்புறுத்திக் கூறினார். ஆசையும், பாசமும் அற்ற நிலையில் துன்பந்தீரும்; பிறவிப் பெருந் துயரம் நீங்கும்; ஆன்மா விடுதலையடையுமென்றார். நம்உள்ளத்திலே ஆசை முகிழ்க்கிறது. அதனை வழிநடத்த ஆயிரம் ஆயிரம் தீய எண்ணங்கள் சேனைகளென நிற்கின்றன. அவற்றுக்கெதிராகப் போராடி நாம் அவற்றை வெற்றிகொள்ள வேண்டும். அந்த வெற்றியை எமக்காக வேறு யாரும் பெற்றுத்தர முடியாது. நாமே முயன்று பெற வேண்டும். புத்தபெருமான் தாம் கடைப்பிடித்து வெற்றியடைந்த எட்டு அம்சப் பாதையை எம்முன் வைத்துள்ளார். அவற்றின் துணைகொண்டு நாமும் எமைச் சூழும் துன்பத்தினை அகற்ற முடியும்.

நற்சிந்தனை, நல்லெண்ணம், நல்வாய்மை, நல்ல வார்த்தை, நற்செய்கை, நல்வாழ்க்கை, நற்பயன், நல்லவர்களுடன் தலைப்பாடு கொண்டு வாழுதல் ஆகியவைகளே அவர் கடைப்பிடித்த எட்டு வழிகளாகும்.

புத்தர் பஞ்சமாபாதகங்களை வெறுத்தார். அறத்தை வற்புறுத்தினார். சகல உயிர்களின்மீதும் காருண்யமாயிருந்தார். பிறப்பினால் உயர்வு தாழ்வு இல்லை; செய்கையினாலேதான் உயர்வு தாழ்வு தீர்மானிக்கப்படும் என்றார். மனிதகுலத்துக்குத்தொண்டு புரிதலே உண்மையான அறமென்றார்.

பெரு நெறியினை வகுத்த பெருமான் புத்தர் தானும் அவ்வழியே செயற்பட்டு வெற்றி பெற்றவர். நிர்வாண நிலையை அடைந்த புத்தபெருமான் அவ்வழியே எம்மையும் செயற்படவேண்டுமென்ற விருப்பில் ‘தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்’ என எண்ணி ஏனையோர்க்கு உபதேசம் செய்வார். அவரிடத்தில் காணப்பெற்ற அன்பு, பொறுமை, தன்னடக்கம், தியானம், தக்க முறையில் உண்மையைக் காணும் தன்மை இவைதாம் அவரது வெற்றியின் இரகசியம். வரலாற்றில் பெரும் சாம்ராஜ்ய மன்னர்களின் குரல்களைவிட மனிதத்தன்மையுடனும் மாறாத மதிப்புடனும் பௌத்த பெருமானின் வார்த்தைகள் எம் செவிகளை நிறைத்தவண்ணமாக இருக்கின்றன.

# மே நன்னாளே பொலிவுடன் வருக இன்றே

தன்னலந் தனைத் தகர்த்து,
தாழ்வுறும் மனித வாழ்வில்
நன் னலங் காண வேண்டி
நாளெலாம் உழைப்பான் தோழன்.
அன்னவன் அணி திரண்டு
அகிலத்தில் வெற்றி கொண்ட,
உன்னதப் பொன்மே நாளே
உயர்வுடன் வருக இன்றே

★

ஏற்றமாம் கழனி தன்னில்
ஏர்கொண்டு போர்தொடுப்போர்,
ஆற்றலோடாலை தன்னில்
அயராது உழைப்போர், மற்றோர்
வேற்றுமை அகற்றி எங்கும்
வெற்றியின் முரசம் ஆர்த்துப்
போற்றிடும் மே நன்னாளே
பொலிவுடன் வருக இன்றே!

— கரவை. கி. குலசேகரன்

தம்பி அன் கோ.,

வண்ணார்பண்ணை :-: யாழ்ப்பாணம்.

ரூ. 1000\- தொடக்கம் ரூ. 10000 - வரை

தவணை வைப்புக்கு ( all Deposits)
கீழ் குறித்த வட்டி கொடுக்கப்படும்.

7 நாள் அறிவித்தலில் எடுப்பதற்கு வருடம் 7 சத வீதம்
30 நாள் அறிவித்தலில் எடுப்பதற்கு வருடம் 8 சத வீதம்

இதே மாதிரி 10 விளம்பரம் தருபவர்க்கு ஒரு சுவீப் ரிக்கற் இனமாகக் கொடுக்கப்படும்.

...நிறைந்திருக்கும் இந்த அமைதியான சூழலிடையே அமைந்திருந்த இந்த வீதி பாரிய மலர்மரங்களிடையே செல்வதால்தானோ என்னவோ அதற்கு ‘பிளவர்’ வீதி என்று பொருத்தமாகப் பெயரிட்டிருந்தனர்.

‘‘இந்த மாதத்தில் எங்கும் கனக்கப் பூக்கள்தான் இருக்கும்’’ என்று ஜனனிக்குச் சொன்னேன்.

பஸ்தரிப்பு நிலையத்திற்கு வந்துவிட்டோம். எம்மை எதிர்த்தாற்போல வீதியின் அந்தப் புறத்திலும் ஒரு பஸ் தரிப்பு நிலையம், அங்கு பல பாடசாலைச் சிறுவர்கள் நின்றிருந்தனர்.

‘‘அப்பா, அந்த மரத்தைப் பாருங்கோ....’’

ஜனனி கைகாட்டிய திசையில் பார்த்தேன், எம்மை எதிர்த்தாற்போலிருந்த பஸ் தரிப்பு நிலையத்துடன் ஒட்டியதாக ஒரு பெரிய ‘செர்ரி புளொரிஸொம்’ மரம் நின்றிருந்தது. அந்த மரத்தின் இலைகளோ, கிளைகளோ தெரியாவண்ணம் இளஞ்சிவப்புப் பூக்கூட்டம் ... பாடசாலைச் சிறுவர்கள் கேலியும், பேச்சுமாய்க்குதித்துக் கொண்டிருந்தனர்.

ஜனனியின் முகத்திலும், குரலில் விவரிக்க முடியாத ... ஜனனி அந்தப்பூமரத்தையே பார்த்துக் கொண்டிருந்ததை நான்கவனிக்கத்தவற... ...துக் கொண்டேன்.

(4-ம் பக்கம் பார்க்க)

# இப்படி எத்தனை

## நகைச்சுவைக் கட்டுரை

## ஐந்து சதங்கள்

— பொ. சண்முகநாதன் —

நான் அடிக்கடி பஸ்ஸில் யாழ்ப்பாணம் போய் வருபவன். யாழ்ப்பாணத்திலிருந்து எனது பஸ் தரிப்பு நிலையமான மானிப்பாய்க்கு உரிய பஸ் கட்டணம்இருபது சதம். ஆனால் எந்தநேரத்திலும் சில்லறையாக இருபது சதம் கிடைக்குமா என்ன? சில சமயங்களில் இருபத்தைந்து சத ஒற்றை நாணயத்துடன் பஸ் ஏறி, எனக்கு வரவேண்டிய மிகுதி ஐந்து சதத்தைக் கொண்டக்டரிடம் கோட்டைவிட்டிருக்கிறேன். அத்தகைய சில சம்பவங்களை விவரிப்பதே இக்கட்டுரையின்நோக்கமாகும்.

ஒருநாள்-

யாழ்ப்பாணத்திலிருந்து மானிப்பாய் ஊடாகச்செல்லும் பஸ் ஒன்றில் நான் பிரயாணம் செய்துகொண்டிருந்தேன். யாழ்ப்பாணத்தில்இருபத்தைந்து சதநாணயம் ஒன்றைக் கொடுத்து டிக்கட் எடுத்தபோது ‘‘சில்லறை ஐந்து சதம் இல்லை; பிறகு வாங்கிக்கொள்ளும்’’ என்றுகொண்டக்டர் சொல்லியிருந்தார்.

பஸ் சிறிது தூரம் சென்றதும், ஐந்து சதங்கள் கொண்டக்டரிடம் சேர்ந்துவிட்டதை அறிந்துகொண்ட நான் அவரிடம் ‘மிகுதி ஐந்து சதம்’பற்றி நினைவூட்டினேன்.

அதற்கு அவர் சொன்ன பதிலால் நான் வெட்கித் தலைகுனியவேண்டிவந்துவிட்டது. ‘‘உம்முடைய ஐந்து சதத்தைக்கொண்டோடி விடமாட்டேன்; பொறும்தரலாம்’’ என்றவாறு ஏதோ அவசர அலுவல் பார்ப்பது போல் பஸ்ஸுக்குள்ளே இங்கும் அங்குமாக ஓடித் திரிந்தார்.

பஸ் மானிப்பாயைச் சமீபித்துக்கொண்டிருந்தபோது கூட நான் அந்த ஐந்து சதம்பற்றிக் கேட்கவில்லை. கேட்டால் ஒருவேளை ‘‘உம்முடைய ஐந்து சதத்தில் நான் வீடு கட்டப்போவதில்லை; இந்தாரும் பிடியும்’’ என்று சொல்லிக் கொண்டு அவர் அக்காசைத் தந்தால்கூட அது எனக்கு மிகவும் அவமானமாகத் தானே இருக்கும்?

‘நானாகக் கேட்டதில்லை. அவர் தரும்போது வாங்கிக்கொள்வோம்’ என்ற முடிவுடன் இருந்த எனக்கு அன்று அந்த ஐந்துசதம் கிடைக்கவேயில்லை. பஸ் நின்று நான் இறங்கும்வரை கொண்டக்டர் என்னைக் கவனியாதவர்போல் இருந்துவிட்டார்.

இன்னொரு நாள்-

அன்றும் இருபத்தைந்து சதம் கொடுத்து மானிப்பாய்க்கு டிக்கட் எடுத்திருந்தேன். மிகுதி ஐந்து சதத்தைப் பின்பு தருவதாகக் கொண்டக்டர் கூறியிருந்தார்.

பிரயாணத்தின்போது இடையில் ஐந்து சதத்தைக் கேட்கக்கூடாதென்று தீர்மானித்திருந்தேன். அப்படிக் கேட்டால் கொண்டக்டர் ஒருவேளை ‘‘உம்முடைய ஐந்து சதத்தை நான் கொண்டு ஓடிவிடமாட்டேன்’’ என்றோ, ‘‘உம்முடைய ஐந்து சதத்தில் வீடு கட்டப்போவதில்லை’’ என்றோ சொல்லலாம் அல்லவா? அப்படி அவர்சொன்னால் நான் பலர் மத்தியில் அவமானப்படவேண்டும் அல்லவா?

இருந்தாலும் ‘ஐந்து சதத்தை இழக்கவும்கூடாது’ என்று எண்ணிய நான் இன்னொரு முடிவுக்கும் வந்திருந்தேன். அதன்படி ‘நானாகக் கேட்பதில்லை. அவர் தரும்போது வாங்கிக் கொள்வோம்’ என்றில்லாமல், இறங்கும்போது கட்டாயம்கேட்டு வாங்கவேண்டும் என்றிருந்தேன்.

நான் இறங்கவேண்டிய இடமும் வந்தது. இறங்கும்போது மிகுதி ஐந்துசதம் தரவேண்டும் என்ற சங்கதியைக் கொண்டக்டருக்கு நினைவூட்டினேன். அவர் ‘கடைசி நேரமான இப்பொழுதா கேட்கவேண்டும்’ என்ற பாவனையில் நாக்கினால் ‘இச்’ கொட்டியவாறு தனது சட்டைப் பையில் கைவிட்டு சில்லறைகளைக் கோலி எடுத்து கையைச்சுளகாக்கி புடைத்துப் புடைத்து அதற்குள் ஐந்து சதம் இருக்கிறதா எனத் தேடிக்கொண்டிருந்தார்...

இப்படியே நேரம்போய்க் கொண்டிருந்தால், அந்தப் பஸ்ஸில் ஏறுவதற்காக மிதிபலகைக்கு முன் மொய்த்துக்கொண்டிருந்த பிரயாணிகளின் சீற்றத்திற்குத்தான் ஆளாகவேண்டும். எனவே நானாகவே கொண்டக்டரிடம் ‘‘பரவாயில்லை இருக்கட்டும்’’ என்று சொல்லிவிட்டு இறங்கி நடையைக் கட்டினேன்.

வேறொருநாள்—

அது ‘எக்ஸ்பிரஸ்’ என்று சொல்லப்படும்ஒரு கடுகதி பஸ். இதில் பிரயாணிகள் ஏறுவதற்கான வாசல் பின் பகுதியிலும், இறங்குவதற்கான வாசல் முன் பகுதியிலும் இருக்கும். பிரயாணிகள் இதில் முறை தவறி நடந்தால் கொண்டக்டரின் பலத்த கண்டனத்துக்கு இலக்காகவேண்டும். இப்பிரச்னையில் சில சமயங்களில் கொண்டக்டருடன் சேர்ந்து டிரைவரும் அத்துமீறிப் பிரவேசிப்பதுண்டு.

அத்தகைய ஒரு கடுகதி பஸ்ஸில் நான் அன்று பிரயாணம் செய்து கொண்டிருந்தேன். பிரயாண விவரங்களும் சில்லறைப் பிரச்னைகளும் முன்போலவே நான் இறங்கும்வரை பஸ்ஸில் எக்கச்சக்கமான கூட்டம்.

ஒருவழியாக இறங்க வேண்டிய இடமும் நெருங்கிக் கொண்டிருந்தது. கொண்டக்டரிடம் மிகுதி ஐந்துசதத்தைக் கேட்கமுடியாமலிருந்தது. பஸ்ஸின் ஏறுவதற்கான பின்வாசலில் நிற்கும் அவரை சன நெரிசலில் பார்க்கவே முடியவில்லை. தவிர சனத்தை விலக்கிக்கொண்டு அவரண்டைபோய் ஐந்து சதத்தை வாங்கிக் கொண்டு அந்த வாசலாலேயே இறங்கலாமென்றால் அது முறை தவறி நடப்பதாக முடியும். அத்துடன் அப்படி நடந்தமைக்காக நான் கண்டிக்கப்படவும் கூடுமல்லவா?

அப்பொழுது எனக்குத் தோன்றிய ஒரே வழி இறங்குவதற்கான முன்வாசலால் இறங்கி நிலத்தில் சிறிது நடந்து கொண்டக்டர் நிற்கும்பின் வாசலை அணுகி அவரிடம் ஐந்துசதத்தைக் கேட்கவேண்டும் என்பதேயாகும்.

அதன்படியே நான் மானிப்பாயில் இறங்கிக் கொண்டக்டரை அணுகுவதற்கு முன் அந்தோ அந்தக் கடுகதி புறப்பட்டுவிட்டது. கேவலம் ஐந்துசதத்துக்காக கையைத்தட்டியவாறு பஸ்ஸைத் துரத்திக் கொண்டு ஓடுவதா?

மற்றொருநாள் —

ஆரம்பக் கதையெல்லாம் முன்போலவேதான். இடையில் கொண்டக்டரிடம் மிகுதி ஐந்துசதத்தைக் கேட்டபோது அவர் சொன்ன பதில் என்ன தெரியுமா? அதுதான் முன்பே தந்துவிட்டேனே!’’

எப்படியிருக்கும் எனக்கு? முதன் முதலாக என்னைப் பொய்யனாகவும் ஏமாற்றுக் காரனாகவும் ஆக்கிய முதல் மனிதனே அந்தக் கொண்டக்டர்தான். எனக்கு அப்பொழுது ஏற்பட்ட அவமானத்தில் அந்த ஐந்துசதத்தைக் கேட்காமல் விட்டிருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும். என்றுதான் தோன்றியது.

அந்தச் சந்தர்ப்பத்தில் நான் கொண்டக்டரிடம் எதைச்சொல்லி எனது கட்சியை நிலைநாட்டினாலும் பிரயாணிகள் மத்தியில் அதனால் எனக்கு அவமானத்துக்குமேல் அவமானமே ஏற்படும்.

‘இல்லை தரவில்லை’ என்று சொல்லி வாதாடிக் கொண்டிருந்தால் ‘‘கஞ்சப்பயல், போயும் போயும் ஐந்துசதத்திற்காகச் சண்டைபோட்டுக் கொண்டிருக்கிறான்’’ என்று பிரயாணிகள் என்னைப்பற்றி எண்ணுவர்.

வாதாடிக்கொண்டு இருப்பானேன் என்று ‘‘சரி, தந்திருப்பீர்கள்; நான்தான் மறந்திருப்பேன்’’ என்று சொன்னாலோ ‘ஏமாற்றுக் காரன்’ பட்டம் கிடைக்கும்.

(4-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ''வெறும் பேச்சினால் நாடகக்கலை வளராது''

## மட்டுநகர் எழுத்தாளர் சங்க செயலாளர் கருத்து

''நாடகக் கலையைப் பற்றிப் பேசுவதென்பது நீச்சல் கலையைப்பற்றிப் பேசுவதுபோலத்தான். நீச்சல் கலையைப்பற்றி எவ்வளவு பேசினாலும் ஒருவன் நீந்தக் கற்றுக்கொள்ள முடியாது. அதுபோலவே நாடகக் கலையைப்பற்றி எவ்வளவுதான் பேசினாலும் நாடகக்கலை வளரமுடியாது. உண்மையாகவே நாடகக்கலை வளரவேண்டுமானால் நிறைய நாடகங்களை நடத்த வேண்டும். அவற்றைப் பொதுமக்கள் பணம் கொடுத்துப் பார்க்க முன்வரவேண்டும்.''

மட்டுநகர் தேன்மதுர இலக்கிய மன்றத்தினர் நடாத்திய நாடக விழாவின்போது உரைநிகழ்த்திய மட்டுநகர் எழுத்தாளர் சங்கச் செயலாளர் திரு. இராநாகலிங்கம் (அன்புமணி) மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது- கடந்த பத்துவருட காலத்தில் மட்டக்களப்பில் எத்தனையோ தரமான நாடகங்கள் நடைபெற்றுள்ளன. 'சங்கிலியன்', முதல் முழக்கம்', 'கடல் கண்ட கனவு' 'திரைகடல் தீபம்', 'எண்ணத்தின் எல்லை', 'முல்லைக் குமரி', 'ஈடிபஸ்' முதலியன அவற்றுட்சில. இவை தவிர சுற்றியுள்ள கிராமங்களில் ஆண்டுதோறும் திறந்த வெளி அரங்குகளில் ஏராளமான நாடகங்கள் நடைபெற்றுள்ளன மட்டுநகரிலேயே தேனமுத இலக்கிய மன்றமும் தமிழ்க் கலாமன்றமும் எண்ணற்ற நகைச்சுவை நாடகங்களை மேடையேற்றியுள்ளன. இவற்றுட்பல வெளியூர்களிலிருந்து வந்த அழைப்பின் பேரில் கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம், பதுளை, திருகோணமலை முதலிய இடங்களிலும் மேடை ஏறி உள்ளன. பரிசு பெற்றநாடகங்களும் நாடகக் கதைகளும் பலவுண்டுஇங்கே.''

## திரைப்பட நகைச்சுவை

தந்தை: எங்கேடா இவ்வளவுநேரமா போயிருந்தே?

மகன்: டீச்சரம்மாவைப் பார்க்கப்போயிருந்தேம்பா.

தந்தை: நீதான் நல்ல பையன். தெரியாததையெல்லாம்நேரமிருக்கும்பொழுது டீச்சர்வீட்டுக்கு போய்க் கற்றுக்கொள்ளவேணும்.

O

இன்ஸ்பெக்டர்: ரகசியப் பொலிஸ்-115க்குஇன்னிக்கு எங்கே வேலைகொடுத்தேன்.

டைரக்டர்: 'ரகசியப் பொலிஸ்-115' படம் நடக்கிற சினிமாத் தியேட்டரிலே வேலைகொடுத்திருக்கிங்க சார்!

O

பங்கஜம்; எங்க வீட்டுப் பிள்ளையைப் பார்த்தியாடீ?

வனஜா இப்பத்தான் மாமி உங்க பிள்ளையை கடைக்கு அனுப்பிவைத்தேன்.

பங்கஜம்: நான் அதைக் கேக்கல்லே? நீ'எங்கவீட்டுப் பிள்ளை' படம் வந்தா இன்னொரு தடவை பார்க்கணும்ன்னு சொன்னியே அதைக்கேட்டேன்.

O

சாப்பிடவந்தவர்: என்னப்பா சர்வர், காப்பியிலே சர்க்கரையே இல்லையே?

சர்வர்: அதெப்படிங்க இருக்கும்? காப்பியை ஆத்தும்போதே சர்க்கரை கரைந்துவிடுமே!

பி. கே. ஈஸ்வரன்,
சென்னை-21.

'யோகி' தயாரித்து தரும்

# கலை அரங்கம்

# இரு நாடகங்கள்

[நெல்லியடிகாளிகோவிலடியில் நெல்லை சண்முகானந்த நாடகசபையார் 'போடு புள்ளடி' 'முடிவு எங்கே?' என்ற இருநாடகங்களையும் புத்தாண்டு தினத்தில் அரங்கேற்றினார்கள். இவ் இருநாடகங்கள்பற்றியும் நெல்லை. க. பேரன் இங்கு விமர்சிக்கிறார்.]

## ''போடு புள்ளடி''

கிராமசபைத் தேர்தலில் நிற்கும் அருணாசலம் நான் வென்றால் அதுசெய்வேன்- இது செய்வேன் என்று சொல்கிறார். அவருக்கு ஆதரவாக குட்டியரும், கார்ச் சாரதி மணியமும், அண்டல் ஐயாத்துரையும் கொடி கட்டி அலுவல் பார்க்கிறார்கள். ஆனால் தேர்தலில் ஒரு துண்டினால் ஒருபடி வெற்றிபெறும் அருணாசலம் இறுதியில் தனது வாக்குறுதிகளையெல்லாம் காற்றிலே பறக்கவிடுகிறார். உதவி செய்த நண்பர்களையும்'பச்சைக்குடிகாரர்கள்' என்று திட்டி அனுப்பிவிடுகிறார். இதனால் தேர்தல் வெறும் பம்மாத்து என்பதை மக்கள் உணரும்படி செய்கிறார்கள்.''

அபேட்சகர் அருணாசலமாக துரைசாமியும், குட்டியராக தி. கோதிசிஸ், ஐயாத்துரையாக தி. சஞ்சராசா, மணியமாக கு. சிவராசா, தெய்வி அக்கையாக க. தவராசா ஆகியோர் தோன்றி மிகவும் நகைச்சுவைததும்ப நடித்தனர். வார்த்தைக்கு வார்த்தை அருமையான பாவனைகளைக்காட்டி ரசிகர்களின் சிந்தனையைத் தூண்டும்படியாக நடித்துப் பாராட்டுப் பெற்றனர். நடிப்பில் எவரையுமே குறை சொல்லமுடியவில்லை. அருணாசலமாக வந்தவர் அசல் அபேட்சகராகவே மாறிவிட்டார், அத்தனை இயற்கையான நடிப்பு. மொத்தத்தில் இந்த நாடகம் சபாஷ்தான்!

## ''முடிவு எங்கே?''

தனிமனிதன் எவ்வளவு உதவிசெய்தாலும் ஒரு ஏழைக்குடும்பம்முன்னேறிப் பின்னர் அவரது உதவிகளை மறந்துவிடுகிறது என்பதுதான் இக்கதையின் கரு. ஏழை விவசாயியாக தி. பஞ்சாராசாவும் செல்லாச்சியாக கரவை அருளானந்தமும், சிவனேசராக கு. சிவராசாவும், கிளாக்கர் கந்தசாமியாக நா. சிவராசாவும், வசந்தியாக ரகுபதியும், பாலச்சந்திரனாக க. இரங்கநாதனும், ஆனந்தியாக செல்வன் செல்லத்துரையும் கொண்டக்டர் பாலசிங்கமாக தி. சோதிசிங்கும் தோன்றி நடித்தனர். பிச்சைக்காரனாக எஸ். நடேசு தோன்றி மிகவும் உருக்கமாக நடித்தார். செல்லாச்சியக்கையாக வந்த கரவை அருள் அசல் அக்கையாக ஒப்பாரி வைத்து அழுது பெண்களைக் கண்கலங்க வைத்தார். ஒரு பெண்கூட இப்படி நடிப்பாளா என்று வியக்கும்படியாக அமைந்தது அவரது நடிப்பு. சில பாத்திரங்கள் கொஞ்சம் ஓவராகவே பேசி நடித்தாலும் மொத்தத்தில் நன்றாகவே செய்துள்ளார். சோலைக்குள் காதல் கட்டமொன்று இயற்கையாகவே வெகு ஜோராக அமைத்தார்கள். கரவை அருள், வே. பத்மநாதன் ஆகியோரின் டைரக்ஷனிலும் இசையரசு மு. கனகரத்தினத்தின் மேற்பார்வையிலும் உருவான இந்த இரண்டு நாடகங்களாலும் நெல்லை சண்முகானந்த சபா தனது பரம்பரைப் புகழைக் காப்பாற்றிக்கொண்டது.

## சோவியத் திரைப்பட விழாவுக்கு தடை

இந்தோனேஷியாவில் நடைபெறவிருக்கும் சோவியத் திரைப்பட விழாவுக்குத் தடை விதிப்பதென முடிவாகியுள்ளது.

சோவியத் திரைப்பட வாரவிழா அடுத்தவாரம் ஜாகர்த்தா நகரில் நடைபெறவிருந்தது. இதுபற்றி ஆராய்ந்த இந்தோனேஷிய ராணுவ அதிகாரிகள் அந்த விழாவுக்குத்தடை விதிப்பதென முடிவு செய்தனர்.

நாட்டின் தற்காப்புக்காக இந்த விழாவைத் தடை செய்யவேண்டியிருப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# கொள்ளைக்காரனாக சிவாஜி கணேசன் நடிக்கிறார்

நடிகர் சிவாஜி கணேசன் கொள்ளைக்காரன் வேடமேற்று நடிக்கிறார்.

சுஜாதா சினி ஆர்ட்ஸ் கம்பெனியார் ஒருபுதுப்படம் தயாரிக்கிறார்கள். இதில் சிவாஜி கணேசன், எஸ். வி. ராமதாஸ் ஆகியோர் கொள்ளைக்காரர்களாக நடிக்கிறார்கள். அந்தக் கொள்ளைக்கூட்டத்தின் தலைவனாக பாலாஜி நடிக்கிறார்.

ஆனால் சிவாஜி கணேசன் இடையில் திருந்திவிடுகிறார். தூய வாழ்க்கையை மேற்கொள்கிறார்.

இதை பொலிஸ் இன்ஸ்பெக்டர் சுந்தரராஜனால் நம்பமுடியவில்லை. எந்த ஊரில் கொள்ளை நடந்தாலும் சிவாஜி கணேசனையே தொல்லைப்படுத்துகிறார்

இதனால் சிவாஜிக்கும் சுந்தரராஜனுக்கும் மோதல் ஏற்படுகிறது. இருவரும் காரசாரமாகப் பேசிக்கொள்கிறார்கள். இத்தகைய காட்சி சாரதா ஸ்ருடியோவில் படமாக்கப்பட்டது. ஏ. சி. திருலோகசுந்தர் டைரக்ஷன்செய்தார். இப்படத்தில் சிவாஜியின் மனைவியாக கே. ஆர். விஜயாவும், மகளாக சிறுமி ராணியும் நடிக்கிறார்கள் மற்றும் நாகேஷ், புஸ்பமாலா, விஜயலலிதா சுந்தரிபாய், சி. கே. சரஸ்வதி ஆகியோரும் நடிக்கிறார்கள்.

# சபாஷ், கலாவிநோதன்!

தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளியம்மன் கோவில் வீதியில் 22-4 69செவ்வாய்க்கிழமையன்று ''சாவித்திரி'' என்னும் நாடகம் மாதனைக் கலைமன்றத்தாரால் முதன்முதலாக மேடையேற்றப்பட்டது. நீண்டகாலஇடைவெளிக்குப் பின்பு நடைபெற்ற ''சாவித்திரி'' நாடகம் சகல கலையம்சங்களும் நிறைந்து சிறப்போடுவிளங்கியது. நடிப்பு, ஆடல், பாடல், நகைச்சுவை என்பனவற்றுக்கு நாடகத்தில் பஞ்சமில்லை. அனுபவம்மிக்க நடிகர்களின் நடிப்பைக் கண்டு மகிழ நல்லதொரு நாடகம்.

மாதனைக்கலைமன்றத்தைச் சேர்ந்த அகில இலங்கை வானொலி புகழ் நடிகர் கே. என். நவரத்தினம். கலைவாணர் வில்லிசைக்குழுவைச் சேர்ந்த கலாவிநோதன் கே. என். கணபதிப்பிள்ளை ரி. மகாலிங்கம், எஸ். இராசதுரை, பி. சிவப்பிரகாசம் ஆகியோருடைய திறமையான பண்பட்ட நடிப்பு நாடகத்துக்கு உயிரூட்டுகிறது. மேலும் இராசதுரை மகாலிங்கம் ஆகியோர் பாடும் இனியபாடல்களும் சிவப்பிரகாசத்தின் சாதுரியப்பேச்சும் நகைச்சுவையும் நாடகத்தை விறுவிறுப்பாக இட்டுச்செல்கின்றன. நாடகத்தின் மிகமுக்கியபாத்திரம் எமதர்மராஜன். அப்பாத்திரத்தை ஏற்றுநடித்த கே. என். கணபதிப்பிள்ளை தென்னகத்துச் சினிமா நடிகர் ரங்கராவ்தானோ என வியப்புறும் வண்ணம் அதி அற்புதமாக நடித்திருக்கிறார்.

இந்நாடகத்துக்குக் கலைஞர் கிருஷ்ணராஜனும் உதவியாளர் தில்லையும் ஒப்பனை செய்துள்ளார்கள். இந்திய சினிமாத்துறையினரைப் போல் வெகுஅழகாகவும் நேர்த்தியாகவும் பார்ப்பவர்களுக்கு இதமூட்டும் வகையில் ஒப்பனை அமைந்திருந்தது. நமது நாட்டில் ஒழுக்கம், அன்பு, அமைதி முதலியன நிலவவேண்டுமாயின் இத்தகைய நல்ல நாடகங்கள் உருவாகவேண்டும். அவை பல பகுதிகளிலும் நடிக்கப்படல் வேண்டும். அப்பொழுதுதான் மக்கள் நாடகமூலம் பயனடைவார்கள். — ''அருள்''

## சிறுகதை ....

(3ம் பக்கத் தொடர்ச்சி)

மணி இரவு பன்னிரண்டிருக்கும். மழைபெய்து கொண்டேயிருந்தது. இன்னும் நான் விழித்துக் கொண்டேயிருந்தேன். மனைவி அடிக்கொடுக்கால் 'ஓடிக்குலோனி'ல் துண்டை நனைத்து ஜனனியின் நெற்றியில் சாற்றிக்கொண்டிருந்தாள். ஜனனி இன்னும் நன்றாய்க் கண் அயரவில்லை...

இருந்தாற்போல மழையின் இரைச்சல் அதிகமாகியது வீட்டின்மேல் கடலைக் கவிழ்த்துக் கொட்டுவது போல பெரிய அட்டகாசம்... கண்ணை மின்னலொளிவெட்டிப்பறக்க இடியோசை காதைச் செவிடாக்கியது...

போர்வையை உதறிக்கொண்டே ஜனனி எழுந்து படுக்கையில் இருந்துகொண்டாள். ''ஐயோ... மழை சரியாய்ப் பெய்யுது, அப்பா, அந்த மரத்திலுள்ள பூ எல்லாம் நிலத்திலைவிழுகுதுகள். ...கெதிகெதியாய் விழுகுதுகள்... ஐயோ இன்னும்கொஞ்சப் பூவள்தான் மரத்திலை இருக்கு... மழை பூ எல்லாத்தையும் ... நீந்திப்போகுதுகள்... நிலத்திலும் பூ இல்லை... நிமிர்ந்து பாருங்கோ ... மரத்திலும் பூல்லை... வெறும் இலையள்தான்... காற்றிலை அந்தமரம் ஆடுது... நல்லாய் ஆடுது... ஐயோ ... அம்மா அது விழப்போகுது...''

வெண்ணீல ஒளி கண்ணைப் பறித்தது!... ''புடீம்!'' ... வீடே அதிர்ந்தது... எங்கேயோ இடி விழுந்திருக்க வேண்டும்... ''அப்பா...! ஐயோ அந்த மரம் சரியுதப்பா... ஆ... ஆ... இப்ப விழுந்தே போச்சுது...!'' என்று குழறிய ஜனனி அப்படியே மூர்ச்சித்து படுக்கையில் விழுகிறாள்...

''ஜனு!'' என்று மனைவி கத்தியேவிட்டாள் ... நான் அவசரமாய் தண்ணீர் எடுத்து ஜனுவின் முகத்தில் தெளித்தேன். இரண்டுநிமிஷத்தின் பின் மெதுவாய்க் கண் திறந்தாள் ஜனனி. அவள் உடலெல்லாம் வியர்வை ஆறாய் ஓடியது. நான் அதைத் துவாயினால் ஒற்றி ஒற்றி எடுத்துக்

## இப்படி எத்தனை...

(3-ம்பக்கத்தொடர்ச்சி)

இருதலைக்கொள்ளி எறும்பு நிலையில் கொண்டக்டர் தரவில்லையென்பதற்கு யாரைச்சாட்சிக்கு அழைக்கலாம் என்று ஒருபுறமும், 'போனால் போகட்டும், ஆனால் எப்படி அதைச் சொல்வது' என்று மறுபுறமுமாகச் சிந்தித்துக் கொண்டிருந்தேன்.

கொண்டக்டர் தொடர்ந்து சொன்னார். ''ஒரு வேளை சீற்றுக்குக் கீழே எங்காவது விழுந்திருக்கும். வடிவாப்பாரும்.''

ஐந்துசதம் போனாலும் அப்பொழுது நான் இருந்த நிலையில் கொண்டக்டரின் அந்த வார்த்தை என் நெஞ்சில் பால் வார்த்ததுபோல் இருந்தது. அதுதான் சமயமென்று நானும் சமாளித்துக்கொண்டு சொன்னேன். 'ஐந்து சதம்தானே, பறவாயில்லை''

''கேவலம் ஐந்துசதத்தை அதுவும் ஏமாளித்தனமாகப் பறகொடுத்து விட்டு அந்த வெட்கம் கெட்ட கதையை வேறு சொல்லிக்கொண்டிருக்கிறானே கஞ்சப் பயல்'' என்கிறீர்களா?

ஆனால் உங்களுக்கு எங்கே தெரியப்போகிறது, இப்படி எத்தனை நாட்களில் எத்தனை ஐந்துசதங்களை இழந்திருக்கிறேன் என்ற சங்கதி.

சிறு துரும்பும் பல்லுக் குத்த உதவும் 'சிறுதுளி பெருவெள்ளம்' என்ற பழமொழிகளெல்லாம் நீங்களும் அறிந்ததுதானே!

(யாவும் கற்பனை

# ஓய்வுநேரத்தை பொன்னாக்குங்கள்

நேரம் பொன் போன் ... சரி தங்கள் குழந்தைகளுக் காயினும் சரி உடை ...

அ... கார வேலைப்பாடுகள் போன்ற விலைமதிப்பற்றபல பொருட்களை தயாரிக்கிறார்கள். இ... கள் ... கள் போக மீதியைநாட்டின் ...

**சகோதரிகளே!**

மங்கையர் தம் ஒய்வு நேரத்தைப் பயனுள்ளதாகப் பயன்படுத்த தக்கவழிகளைக் 'குடும்பச்சுடர்' தொடர்ந்து உங்களுக்குத்தரமுன்வந்துள்ளது. ஒய்வு நேரத்தை மகளிர் ... பயன்படுத்த தக்கவழிகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓய்வுநேரத்தைப் பொன்னாக்குங்கள்

நேரம் பொன் போன்றது. இப்பொன்னான நேரத்தை நாம் மண்ணாக்கக் கூடாது. மங்கையர் தமக்குக் கிடைக்கும் ஓய்வுநேரங்களை வீணாக வம்பளந்து பொழுது போக்குவதிலும் பார்க்க பயனுள்ள வழிகளில் செலவழித்தால் தம் குடும்ப பொருளாதாரத்தை முன்னேற்றவும் அதேநேரத்தில் தங்கள் தேவைகளிற் சிலவற்றைப் பிறர் உதவியை எதிர்பாராது பூர்த்திசெய்யவும் ஏதுவாகவிருக்கும்.

தங்கள் குடும்பத்துக்குத் தேவையான தையல்வேலை, பொம்மை போன்ற விளையாட்டுப் பொருட்கள் செய்தல், சில உணவுப்பொருட்களை அவை கிடைக்காத காலத்து வைத்துப் பயன்படுத்தத் தக்கவாறு பதனிடல், வீட்டை அழகுறவைத்திருக்கத்தேவையான சில அலங்காரப் பொருட்களைதயாரித்தல், வீட்டுத் தோட்டம் போன்ற இன்னோரன்ன பல வேலைகளை மகளிர் தங்கள் வேலைகளை முடித்துக் கொண்டு ஓய்வாகவிருக்கும் நேரங்களில் கைக்கொள்ளலாம்.

ஓய்வுநேரத்தைப் பயனுள்ளதாகப் பயன்படுத்த தையலருக்கு தையற்கலை தலைசிறந்ததொன்றாகும். இன்று வசதியற்றவர்கள் மட்டுமன்றி தாங்களே உடைகளைத்தைத்துக்கொள்வதற்கு வசதியான பெரும்பாலான மகளிரும் தங்களுக்காயினும் சரி தங்கள் குழந்தைகளுக்காயினும் சரி உடைகளைத் தயாரிப்பதற்குத் தையல்கடைக்காரர்களையே நம்பியிருக்கிறார்கள். இதைச் சில நவநாகரிக நங்கையர் பெருமையாகவும் கருதுகிறார்கள். இதனால் இவர்கள் குடும்பத்தின் வருவாயின் பெரும்பங்கு வீணாக விரயமாகிறதோடு சில வேளைகளில் தைக்கப்படும் உடுப்புகள் அளவற்றோ அல்லது பெரிதாகவோ காணப்படின் அவ்வுடுப்புகளும் வீணாகின்றன. அதே நேரத்தில் மீதியாகப்போகும் சிறு சிறு துண்டுகளும் வீணாகின்றன.

ஒவ்வொரு குடும்பப் பெண்களும் இந்தத் தையல் வேலையைத் தாங்களே செய்து கொண்டால் முதலாவதாக உடுப்புகளைத் தங்களுக்கும் தங்கள் குழந்தைகளுக்கும் அளவாகத் தம் விருப்பப்படி தைத்துக் கொள்ளலாம். இரண்டாவதாக தையற்செலவு மீதப்படுத்தப்படுகிறது. மூன்றாவதாக மீதியாகும் சிறு துண்டுகளைப் பிரயோசனப்படுத்தி குழந்தைகளுக்கான உடைகளை அலங்காரமாகத் தைக்கலாம். அல்லது அவைகளைச் சிறு துண்டுகளாக அழகானவடிவங்களில் வெட்டி பொருத்தி மேசை, ரீப்போ போன்றவற்றிற்கு மத்தியில்விரிக்கும் அலங்காரவிரிப்பாகப் பாவிக்கலாம். அநேகமாக நம்நாட்டவர்கள் இச்சிறு துண்டுகளைப் பயன்படுத்தி செய்யும் அலங்கார பொருட்களை விலைக்கு வாங்குவார்களேயன்றி அவற்றை ஒவ்வொருவரும் செய்து பயன்பெற விரும்புவதில்லை. மேலைநாட்டவர்களோவெனில் இவ்வேலைகளைத் தங்கள்பொழுதுபோக்காகக்கொண்டு மேற்கூறிய அலங்கார விரிப்புகளையோ அல்லது வேறு பொருட்களையோ தாங்களே செய்துவிடுகிறார்கள். சீன, யப்பானிய மாதர்கள் இந்த நுண்ணியவேலைப்பாடுகளைச் சிக்கனமாகவும் அழகாகவும் செய்வதில் கைதேர்ந்தவர்கள். அவர்களைப் பின்பற்றி நாமும் இவைகளில் ஈடுபட்டால் சிக்கனமாக வாழலாம். இல்லத்தையும் அழகாக இலங்கச்செய்யலாம்.




இதைவிட நவநாகரிகமான வேலைப்பாடுகள் அமைய உடுப்புகளை மங்கையர் தைக்கவேண்டுமானால் 'லேஸ்' (றேந்தை), கம்பளி உடைகள் போன்றவற்றைப் பின்னவும், (எம்புரோய்டரி) பூவேலைப்பாடமைந்த தையல்களைத் தைக்கவும் ஓய்வுநேரங்களில் தெரிந்தவர்களிடம் இருந்து கற்றுக் கொண்டால் பணத்தைஇவ் வேலைப்பாடமைந்த உடைகளை வாங்குவதில் செலவு செய்யாமல் குறைந்தசெலவோடு தாமே அவைகளைத் தயாரித்துக் கொள்ளலாம்

சீனா, யப்பான் போன்ற முன்னேற்றமடைந்த நாடுகளிலுள்ள பெண்கள்தங்கள் வேலைகள் ஒழிந்த ஓய்வு நேரங்களில் இந்த அலங்காரத்தையல் கலையைப் பயன்படுத்தியே தாங்கள் நாகரிகமாகக்கொண்டுசெல்லும் டம்பப்பைகள், குழந்தைகளின் விளையாட்டுப் பொம்மைகள், வீட்டுச்சுவர்களில் தொங்கவிடத்தக்க போன்ற விலைமதிப்பற்றபல பொருட்களை தயாரிக்கிறார்கள். இப்பொருட்களில் தங்கள் தேவைகளுக்கானவைகள்போக மீதியைநாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்குதவ பிற நாடுகளுக்கு ஏற்றுமதிசெய்யவும் கொடுக்கிறார்கள் என்றால் இது இந்நாடுகளிலுள்ள மாதர்களின் முன்னேற்றத்தை மட்டுமன்றி அவர்கள் ஓய்வு நேரத்தை மண்ணாக்காதுபொன்னாக்குவதையும் காட்டுகிறதல்லவா? நாமும் ஏன் இவர்களைப் பின்பற்றி வீட்டினதும்நாட்டினதும் பொருளாதாரத்தை விருத்தி செய்யக்கூடாது?

எனவே மகளிர் இத்தகைய பல பயன்தரு தையல்கலையைப் பயின்று ஓய்வுநேரத்தில் பயன்படுத்தினால் அவர்களின் ஓய்வு நேரம் நல்லவழியில் செலவாகிறது. மேலதிகசெலவு மீதப்படுத்தப்படுகிறது. தாங்கள் அழகாகத்தயாரித்தஉடைகளை அணிவதால் சுயமுயற்சியின் பெருமையும் உண்டாகிறது. இப்பொருட்களுக்காகப்பிறநாடுகளையோ பிறரையோ எதிர்பார்க்கவேண்டிய நிலையும் அற்றுப்போகிறது. இதனால் நாட்டின் அன்னிய செலாவணியும் மீதப்படுத்தப்படுகிறது எனலாம்.

## இல்லறம் சிறக்க இனியவழிகள்!

கணவன் கோபித்தால் அடங்கிப்போய்விட வேண்டும். சமயம் அறியாது கூறிச் சண்டைக்கு அடிகோலக்கூடாது. புத்திசாலித்தனமாக நடந்து புருஷனிடம் தம் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ளத்தெரியாத பெண்கள்தான் திருப்தி அடையாதஉள்ளத்துடன் வாழ்வார்கள்.

★

ஒவ்வொரு மாதத்துக்கும் ஆரம்பத்திலேயே குடும்பப்பெண் செலவுத் திட்டம் தயாரித்துக் கொள்ளவேண்டும். அதில் இன்றியமையாத செலவுகளுக்கு முதலிடம் தர வேண்டும்.

★

கணவனைப்பற்றியசெய்திகளைப் பிறரிடமிருந்து சேகரிக்க முயற்சி செய்வது தவறு. அவசியம் தெரியவேண்டிய விவரங்களை அவரிடமே நேரடியாக அன்பாகக் கேட்டுத் தெரிந்து கொள்வதுதான் முறையாகும்.

★

செலவைக் குறைப்பது சிக்கனம் ஆகாது. செலவழிக்கும் பணத்தை அதிகம் பயன்படும்படி செய்வதே சிக்கனமாகும்.

★

என்றோ நடந்ததை எண்ணிப் பொருமிக் கொண்டு இருக்கக் கூடாது. அவ்வப்போது இடித்துப் பேசிக்கணவன் மனம் புண்படச்செய்வது தவறு. அதை அன்றோடு மறந்துவிட வேண்டும். சிடுமூஞ்சித்தனத்துக்கு இடமேதரக்கூடாது.

சகோதரிகளே!

மங்கையர் தம் ஓய்வு நேரத்தைப் பயனுள்ளதாகப் பயன்படுத்த தக்கவழிகளைக் 'குடும்பச்சுடர்' தொடர்ந்து உங்களுக்குத்தர முன்வந்துள்ளது. ஓய்வு நேரத்தை மகளிர் பயன்படுத்த தக்கவழிகளில் ஒன்றான 'தையற்கலை' பற்றிய கட்டுரை இவ்வார குடும்பச்சுடரில் பிரசுரமாகிறது. இதைத் தொடர்ந்து இது சம்பந்தமான கட்டுரைகளை நீங்களும் குடும்பச்சுடருக்கு எழுதுங்கள். கட்டுரைகள் சுருக்கமானவைகளாக காகிதத்தில் ஒரு பக்கத்தில் மாத்திரம்எழுதப்பட்டு இருக்கவேண்டும்.

—குணம்.

## அன்பு

ஒரு பெண்ணின் வாழ்க்கை கடமையையே பிரதான அம்சமாகக் கொண்டது. இன்று கல்விகற்ற ஒவ்வொரு பெண்ணும் உரிமையா? வாழ்க்கையா என்று தன்னைத்தானே கேட்டுக்கொள்ளும் காலம் இது. சில பெண்கள் கணவனிடத்தில் சம உரிமையை எதிர்பார்ப்பார்கள் இது தவறானதாகும். ஒரு பெண் தனது கணவனுக்கு அடிமையாக நடந்தால் கணவர் மனைவியின் அன்புக்கு அடிமையாகிறார். வாழ்க்கையின் அடிப்படை இதுவேயாகும்.

முதலில் அன்பு, இரண்டாவது கடமை, மூன்றாவதே உரிமை. முதலில் அன்புசெய்ய நாம் கற்றுக் கொள்ளவேண்டும். அடிமையாக வாழத் தெரிந்தவளே குடும்பத்தை ஆட்சிசெய்ய முடியும். ஒவ்வொரு பெண்ணும் உரிமை கோரினால் இந்த நாட்டில் குடும்பம் என்ற சொல்லுக்கே பொருள் இருக்காது. குழந்தை வளர்க்கத் தாதியையும், குடும்பம்நடத்தஹோட்டலையும் எதிர் பார்க்க வேண்டியதுதான்.

ஆரம்பத்தில் அடிமையாயாகவே ஒரு பெண் நடத்தப்படுகிறாள் என்று வைத்துக்கொள்வோம்.

## கடமை

நாளடைவில் அவளுடைய அன்பாலும் உழைப்பாலும் மற்றவர்களை அடிமையாக மாற்றி விடுவாள். அன்பு நிறைந்த குடும்பத்தில் உரிமைப் பேச்சுக்கே இடம் கிடையாது. கடமையையுணர்ந்து செயற்பட வேண்டும். உணர்ந்து செய்கிற பெண்ணுக்குத்தான் உரிமை என்றால் என்னவென்பது தெரியும். அன்பினாலும், உழைப்பாலும் அணு அணுவாய்ப் பெறுவதுதான் உரிமை. திருமணமான ஒரு பெண்ணிடத்தில் 'உன்னுடைய விருப்பப்படி எல்லோரும் நடந்து கொள்கிறார்களா என்று கேட்பதைவிட எல்லோரும் விரும்புகிறபடி நடந்து கொள்கிறாயா நீ என்றுதான்கேட்கவேண்டும்

## உரிமை!

குடும்பம் என்பது கோவில் கணவன் என்ற தெய்வத்தின்முன் ஒளிவிடும் குத்துவிளக்குத்தான் மனைவி. பெண், குலமகளாகப் பிறந்தகத்துக்கும் புகுந்தகத்துக்கும் பெருமைதேடித் தமிழ் குணமகளாகத் திகழ வேண்டும். அப்போதுதான் குடும்பம் என்ற சொல்லுக்கே மதிப்பு ஏற்படும். அகிலனின் 'வாழ்வில் இன்பம்' என்ற நூலும் இதைத்தான் தெரிவிக்கிறது. ஒரு பெண் சிறந்த மனைவியாக வாழ இவை துணை செய்யுமென்பதில் ஐயமில்லை.

## பொன் சத்துமிகுந்த பொன்னாங்கண்ணி

பொன்னாங்கண்ணி தேகத்தைப் பொன்னான நிறமாக்கக் கூடிய கண்ணி என்று சிறப்புப் பெயர் பெற்றது. ஆங்கிலத்தில் **Alternanthera Sessiless** என்று இதற்கு விஞ்ஞானப் பெயர் உண்டு. தங்கச் சத்து இதில் மிகுந்து காணப்படுவதனாலேயே பொன் ஆக்கும் சக்தியுடையதாகக் கூறப்படுகிறது.

இக்கீரை எல்லா இடங்களிலும் கிடைக்கக்கூடியது. இதனை நாள்தோறும் சமைத்துச் சாப்பிட்டு வருவது மிக்க நன்மையைத்தரும். இதில் நாட்டுப் பொன்னாங்கண்ணி சீமைப்பொன்னாங்கண்ணி என இருவகையுண்டு. சீமைப் பொன்னாங்கண்ணியைப் பலர் பூந்தோட்டங்களில் அழகுக்காக வளர்ப்பதுண்டு. ஆயினும் இரண்டுக்கும் குணம் ஒன்றே.

இது கண்களுக்கும் அதன் சம்பந்தமான கண் நரம்புகளுக்கும் பரவித் தன் வேலையைச் செய்கிறது. கருவிழி எனப்படும் கிருஷ்ண மண்டல ரோகம், பார்வை மங்கல், தேகச்சூடு போன்ற பல வியாதிகளையும் போக்குவதுடன் உடம்புக்குச் செம்பொன் நிறத்தையும் உண்டாக்கும் என வைத்தியர் பலர் கூறுவர். இக்கீரையில் ஏ. பி, ஸி. டி, என்ற நான்கு விட்டமின்களும் நிறைந்துள்ளன. இத்தகைய அருமையான கீரையைத் தினமும் ஒவ்வொருவரும் தவறாது உண்டு நலமடைவார்களாக.

நன்றி- 'மாதஜோதிடம்.'

லாம் நிலத்திலே விழுகுதுகள்... கெதிகெதியாய் விழுகுதுகள்... ஐயோ இன்னும்கொஞ்சப் பூவள்தான் மரத்திலே இருக்கு... மழை பூ எல்லாத்தையும் அடிச்சுக்கொட்டுது...'' என்று அரற்றியபடியே அழஆரம்பித்துவிட்டாள் ஜனு. எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. இவளுக்கு என்ன பிடித்துவிட்டது? ... மனைவியும் அழ ஆரம்பித்து விட்டாள்...

''ஜனு, பேசாமல்படம்மா ...நாளைக்கு அந்த மரத்தை நாங்கள் போய்ப்பாப்பம்... மரத்தில் நிறையப்பூக்கள் இருக்கத்தான் போகுது... என்னுடைய குஞ்செல்லே... பேசாமல் படம்மா...''- அம்மா அழுகைக்கிடையே கெஞ்சினாள்... நான் ஜனுவின் கண்களைத் துடைத்து விட்டேன்...'


ஆனால் ஜனனி அடங்கவில்லை...''... இல்லையம்மா... உங்களுக்குத் தெரியாது... எனக்கு நல்லாத்தெரியுது. மழை பூ எல்லாத்தையும் அடிச்சுக்கீழே போட்டிட்டுது...கீழையும் பூக்கள் கிடக்குதில்லை... ஒடுறவெள்ளத்திலை அதுகளெல்லாம் ...ஷத்தின் பின் மெதுவாய்க் கண் திறந்தாள் ஜனனி. அவள் உடலெல்லாம் வியர்வை ஆறாய் ஓடியது. நான் அதைத் துவாயினால் ஒற்றி ஒற்றி எடுத்துக் கொண்டேயிருந்தேன்... ஒரு படியாக ஜனனி கண் அயர்ந்துபோனாள்.

விடியற்காலையில் நான் எழுந்தபோது ஜனனி நன்றாய் உறங்கிக்கொண்டிருந்தாள். தலையெல்லாம் கலைந்துபோயிருந்தது. அந்த நிலையில் என் ஜனுக் குட்டியின் முகத்தைப் பார்க்க எனக்கு அழுகையாய் வந்தது..,

மூன்றுநாள்லீவுக்குஎழுதிப் போட்டுவிட்டு வருவோம் என ஆபீஸுக்குக் கிளம்பினேன்.

பஸ் ப்ளவர் றோட்டில் இறங்கியதும் ஏதோ ஒரு ஆவல் உந்த அந்தப் பாரிய 'செர்ரி புளொஸொம்' மரத்தைப் பார்க்கிறேன். அது முதல்நாளடித்த காற்றில் பாறிப்போய் வீதியோரம் விழுந்து கிடந்தது. அதைச் சுற்றி ஒரு கூட்டமே நின்றது... தலைகலைந்த ஜனுவின் முகம் என் மனக் கண்ணில் ஆடியபோது என் கண்களில் நீர்முட்டியது.


மங்கையர் அங்கங்களுக்கு அதீத அழகைக்கொடுப்பது
நவ நாகரிக அமைப்பு வாய்ந்தது.
உத்தரவாதமுள்ளது
தெய்வா நகை மாளிகையின்
தங்க வைர நகைகள். .
இன்றே விஜயஞ்செய்யுங்கள்
தெய்வா நகை மாளிகை
(முட்டாஸ்கடைச் சந்திக்கு அருகாமை)
173, காங்கேசன்துறைவீதி,
யாழ்ப்பாணம்.



"லேடன்" LEYDEN
தயாரிப்புகள்
★ பெனியன்
★ ஸ்போட் சேட்
★ ரி சேட்
★ ரெறி சேட்
★ ரெறி பிளவுஸ்
★ பேபி வெஸ்ட்
★ கால்மேஸ்
(Nylon & Cotton)
லேடன் காமென்ஸ்
74A, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம்.
போன் 330


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஈழநாடு'

## பொது அறிவுப் போட்டி-2

சென்ற வாரம் நாம் கேட்ட கேள்விகளுக்கு சரியான விடைகள் பின்வருமாறு: 1. வைத்தியநாத் 2 சூரியன். இதுவும் நட்சத்திரமே. 3. காசி. வட இந்திய நகரம். 4. பென்சிலின். 5. பிரித்தானியர். 6. திருமதி கோல்டாமெயர். 7. கஞ்சிரா. 8. பாகவதம். 9. கங்கபட்டர். 10 250 வருடங்களுக்கு பின் யேசுகிறிஸ்து பிறப்பார் என்று யாருக்கு தெரியும்?

நேயர்கள் எவருமே முற்றிலும் சரியான விடை அனுப்பவில்லை என்பதை வருதத்துடன் தெரிவிகக வேண்டியிருக்கிறது. போட்டி சற்றே கடுமையானதாகி விட்டதென்று போட்டிக்குழு தீர்மானித்தபடியால் இரண்டாவது போட்டியை சுலபமாக்கியுள்ளோம். ஒரு பிழையுடன் விடை அனுப்பியவருக்கு இரண்டாவது பரிசான ரூபா ஐந்துவழங்கப்படும்.

### இரண்டாம் பரிசு பெறுபவர்

இ. மனேகரன், 58, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

### இந்த வார கேள்விகள்

1. சென்றவாரம் இந்திய காங்கிரஸ் கூட்டத்தில் பந்தல் எரிந்தது எந்த நகரத்தில்? 2. சமீபத்தில் பதவி துறந்த உலகப் பிரமுகர் யார்? 3 சீனத் தலைவர் மாசே துங்கின் வாரிசாக தெரிவுசெய்யப்பட்டவர் யார்? 4. சென்ற மாதம் 29-ம் திகதி 68 வது ஆண்டு நிறைவை கொண்டாடிய சக்கரவர்த்தியின் பெயர் என்ன? 5. இந்து சமுத்திரத்திலுள்ள மிகப் பெரிய தீவு எது? 6. 5, 10, 20. 40, 70, 160 என்ற வரிசையில் தவருன எண் எது? 7. இலங்கையின் ஐந்தாவது பிரதம மந்திரி யார்? 8. பனையின் நிழலும் நிழலோ ........... இப் பழமொழியின் மிகுதி அரைவாசியை நிரப்புக? 9. திருமுருகாற்றுப்படை பாடியவர் எந்த புலவர்? 10. 3 பூனைகள் 3 எலிகளை 3 நிமிடத்தில் கொன்ருல் 100 பூனைகள் 100 எலிகளை எத்தனை நிமிடங்களில் கொல்லும்?

### விகட கவிதைப் போட்டி-2

இப்போட்டிக்கு வந்த விடைகளைப் பார்க்கும் போது இலங்கையில் இத்தனை குட்டி கவிஞர்கள் இருக்கிருர்களோ என்று ஆச்சரியப்படவேண்டியிருக்கிறது. மிகச் சிறந்தது என்று தெரிவுசெய்யப்பட்ட கவிதை இதுதான்:

வீட்டுக் கடங்காத ஆட்டக்காரி-அயல்
வீட்டார் பொருட்களில் நாட்டக்காரி-அயல்
வீட்டினில் நகையொன்று இரவல் மாறி-அது
வீண்பறி போனதும் துன்பம் மீறி-பட்ட
பாட்டைச் சொல்வேன் விரைந்தோடி வாரீர்.

### வெற்றி பெறுபவர்

இதை எழுதி பத்து ரூபா பரிசை தட்டிக் கொண்டு போகிறவர் அ. த. சுந்தரலிங்கம், அல்

# தம்மைத் துன்புறுத்தியவர்களுக்காக நபிகள்நாயகம் இறைவனிடம் கேட்டார்:

## "இறைவனே, இவர்களைத் தண்டித்துவிடாதே"

— எம். எச். எம். அப்துற்றஸ்ஸாக் —

அதிபர், வண்ணை அரசினர் முஸ்லிம் வித்தியாலயம்

அபிசீனியாவிலே நஜ்ஜாஸி மன்னர் இஸ்லாத்தைத் தழுவிக்கொண்டு அதன் விளக்கங்களை அங்குள்ள முஸ்லிம்களிடம் பெற்றுக்கொண்டு ஆட்சிமுறைகளையும் சீர்திருத்தி மறுமலர்ச்சியில் வாழ்கின்ருர். மந்திரி பிரதானிகளும் படிப்படியாக இஸ்லாத்தைப் பின்பற்றி வாழ்கின்றனர். வந்தபடியே வழிக்கொண்ட பக்கத்து குறைஷிகள் அபிசீனியாவிலிருந்து பெருந் தோல்வியுடனும் துக்கத்துடனும் மக்கநகர் வந்து தமக்கு நிகழ்ந்த அளவிலா அவமானத்தை அபூசுப்யான், அபூஜஹல்,, உமய்யா, உதுபா ஆதியோர் மத்தியிலே எடுத்துக் கூறுகின்றனர். நஜ்ஜாஸி மன்னரும் இஸ்லாத்தை ஆதரித்த செய்தியைக் கேட்டதும் ·மேன்மேலும் ஆத்திரங்கொண்டனர் குறைஷிக்காபிர்களின் தலைவர்கள். இவற்றுக்குக் காரணபுருஷரான நபிகள் நாயகத்தை வைதார்கள். எப்படியாவது கொன்றுவிடுவது என்ற முடிவுக்கும் வந்தனர். மறுநாட்காலை நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சிறிய தந்தையான அபூதாலிப்பின் இல்லஞ்சென்று முஹம்மதை எங்களிடம் ஒப்படைத்துவிடவேண்டும். முஹம்மதுக்காக நாங்கள் நல்ல ஒரு அழகான வாலிபரை உமக்குத்தந்து விடுகின்ருேம். முகம்மதுவின் பிரசாரம் எல்லைகடந்து விட்டது. இனி எம்மால் ·சும்மாயிருக்க முடியாது'' என்று குமுறி எழுகின்றனர் அபூதாலிப், நாயகம் (ஸல்) அவர்களைப் பார்த்து 'என்னருமைத் தம்பிமகனே! இவர்கள் கூறுவதைக் கேட்டாயா? சிறிது காலத்திற்காவது உமது பிரசாரத்தை நிறுத்திக்கொள்ளும். இதனுல் எமக்கும் உமக்குந் தொல்லைகளும் தொந்தரவுகளும் நீங்கும். நான் இவர்களின் அபிமானத்துக்கும் சங்கைக்குமுரியவனுக இருக்கிறேனே. அதற்காகவாவது சின்னுள் நிறுத்திப் பேசாதிருத்தல் நல்லது' என வேண்டி நிற்கிருர். பெருமானுர் நபி முகம்மது முஸ்தபா (ஸல்) அவர்கள் சொற்பநேரம் அமைதியாக இருந்து பின் ஒரு முடிவுக்கு வந்தவராகப் பின் வருமாறு கூறுகின்ருர்கள். ''என்னருமைச் சிறிய தந்தையே! ஒருகையிற் சூரியனையும் மறுகையிற் சந்திரனையும் தந்தாலும்கூட நான் கூறுகின்ற ஏகதத்துவ இறைவாக்கியத்தைக் கைவிடேன். என்ருல் உங்களுக்குப் பல தொல்லைகள் ஏற்படுகின்றன. ஆதலால் நான் எங்கேயாவது போய்விடுகிறேன். எங்கு போனுலும் இறைவன் கூறும்படி அருளிய வேதவாக்கியமாய் இறைவன் ஒருவனே; அவனே வணங்கத்தக்கவன்; என்ற அடிப்படைத் தத்துவத்தைச் சொல்லிக்கொண்டே இருப்பேன். இறைவனுடைய கட்டளையை நிறைவேற்ருத எவனும் அவனது தண்டனைக்காளாகுவர் என அழுத்தந்திருத்தமாகக் கூறிவிட்டு வெளியேற முயற்சித்தார்கள். இக்கூற்றை எதிர்பாராத அபூதாலிப் வந்தவர்களைச் சமாதானப்படுத்தி அனுப்பி விட்டு மகனே என்னைவிட்டு நீர் எங்கும் போய்விடாதீர். நானே பாதுகாத்துக் கொள்வேன். உமது இஷ்டப்படி உமது இறைவன் கொள்கையைப் பிரசாரஞ் செய்யும்'' என்று முடிவாகச் சொல்லிவிட்டார். இதனுலே நபிகள் திலகம் (ஸல்) அவர்களுக்கும் அவர்களது கூட்டத்தினருக்கும் இடுக்கண் உண்டானதேயன்றி எதுவித உதவியும் கிடைக்கவில்லை. ஒரு பள்ளத்தாக்கில் வைத்து இரண்டு வருடங்கள்வரை உணவு, நீர் இவைகளை விநியோகஞ் செய்யாது தடுத்து நிறுத்தி வந்தனர் குறைஷிக்காபிர்கள். முஹம்மதுவுக்கும் அவரது கூட்டத்தினருக்கும் உணவு, தண்ணீர் முதலான முக்கிய பொருட்களை விற்பனை செய்யக்கூடாது என அபூசுப்யானும் அபூஜஹலும் சேர்ந்து திட்டம் தீட்டிப் பிரகடனம் செய்கின்றனர். எனினும் எல்லாம் வல்ல இறைவன் தனது வல்லமையினுலே அவர்களுக்கு உணவும் நீரும்கிடைக்கவே செய்தன இறைவனை நம்பி வாழும்போது இறைவன் நிச்சயமாக ஏதாவதொருவகையிலே உதவியளிப்பான் என்பதை நாமும் மறந்துவிடக்கூடாது. நாம் இறைவனை மறந்து மனிதர்களிடம் உதவி கோருகிறோம். அதன் பயன் வீழ்ச்சியன்றி வேறொன்றுமின்று. கடவுளை நம்பினேர் கைவிடப்படார். மனிதன் செய்யும் உதவியும் உபகாரமும் பூரணத்துவமுடையதன்று. போலியானதும் பொய்யானதுவுமே. இறைவன் அருளும் உதவி சாசுவதமானது. பூரணமானது. நிலையானது இன்று உலகமாந்தர் எவராவது நிம்மதியாக வாழ்கின்றனரா? எங்கு நோக்கினும் ஒழுக்கக்கேடு, சண்டை, சச்சரவு, பூசல், பீதி என்பவைகளையே நாம் வாசிக்கின்ருேம், கேட்கின்ருேம், 'தனக்குவமை யில்லாதான் ருள் சேர்ந்தாற் கல்லாது மனக்கவலை மாற்றலரிது' என்று பாடுந் திருவள்ளுவப் பெருந்தகையின் தத்துவப் பொருளை உற்று நோக்கின் அமைதிஎங்குண்டென்பதை உணர்ந்துகொள்வோம். மனிதன் இறைவனுக்கு நன்றி உள்ளவனுக இருக்க வேண்டாமா! மனிதனை எத்துணை அழகாக ஐம்புலனும் பொறியும் அமைத்து எல்லாவற்றினும் மேலாகப்பகுத்தறிவையுந்தந்தானே, அவனைநாவாரப்புகழ்ந்து துதிபாடவேண்டாமா? என்னை ஏழையாக்கிவிட்டார், நான் கஷ்டப்படுகின்றேன் எனஇறைவன் மேல் கோபப்படும் அறிவிலிகள் எத்தனைபேர்? அவர்களிடம், சரிஐயா, கடவுள்தந்த இரு கண்ணில் ஒன்றைத் தந்துவிடு ஓரிலட்சம்ரூபா தருகின்றேனென்ருல் அவன் விரும்புகிருனில்லை அவன் செத்துப்போன பின்னும் அவனது மனைவிமக்கள் தருகின்ருர்களில்லையே ஆவே கடவுள் தந்த கண்களும் காதுகளும் இதரபொறி புலன்களும் எத்தனையெத்தனைகோடிபெறுமென்பதை உண்மையுணர்வாலுணர்ந்தால் இறைவனைப் புகழாது-தொழாது-தோத்திரஞ்செய்யாது-ஏழை யெளியோரைக் கண்ணெடுத்துப்பாராதுஎவரும் இருக்கவேமாட்டார். இன்று எதனை நாம் நமது சமுதாயத்தின் மத்தியிலே காணுகின்ருேம். நமதுவீழ்ச்சியின் மூலகாரணம் யாது? நாம் யாராற் சிருஷ்டிக்கப்பட்டோம்; யாருடைய அம்சத்தைத் தாங்கிக்கொண்டு இவ்வுலகுக்கு வந்தோம்? ஏன்இறக்கின்ருேம், பின்னர் எங்கு செல்லுவோம். எமக்கென்ன சன்மானம் கிடைக்கும் என்பன போன்ற வினக்களை அடிக்கடி நாம் மனதில் எழுப்பி நம்மை நாமேநிறுத்துரைத்துப்பார்க்கின்பாவம் எத்தனை விகிதம்புண்ணியம் எத்தனைவிகிதம் என்பதைப் புரிந்து கொள்ள முடியுமே. இவைகளையுணர்வதே இஸ்லாத்தின் முக்கியதத்துவமாக அமைந்து விளங்குகிறது. எனவேதான் நபிகள் நாதர் சற்குருபோதர் மண், பெண், பொன் ஆசைகளுக்கடிமைப்படாது அனுதையாகத் தன்னந்தனியாக இருந்தபோதிலும் அஞ்சா நெஞ்சராகி வீராவேசத்துடன் ஏகதத்துவமகிமையைப் போதிப்பதில் கிஞ்சித்தும் பின்வாங்காது முழுமூச்சாய்ப் பிரசாரஞ்செய்தும் செய்வித்தும் வந்தனர். எவ்வளவுதூரம்வைராக்கியமனதுடன் இறைதூதை ஏற்றிவைக்க முயற்சிசெய்தார்

ரட்சை இரத்தத்தால் செம்மைநிறமாகியது. பல்லுடைத்தனர்.

அந்த நிலைகளெல்லாம் ''ஏ, இறைவனே! இவர்களைத் தண்டித்துவிடாதே, மன்னித்துவிடு' இவர்கள் ஏற்காவிடினும் இவர்களது பின்தோன்றல்களாவது என்னை நேசிப்பர்'' எனப் பிரார்த்தனை செய்வார்கள். என்னே! அப்பெருந்தகையின் பெருந்தயாள குணம்.

இறுதியாக உயிருக்கு உலைவைக்கப்போவதையறிந்த இறைவன் தனது அமரர் மூலம் ''நபியே, முஹம்மதே; இரவோடு இரவாக மதீனவை நோக்கிப் புறப்பட்டுவிடும்'' என்ற கட்டளையை விடுத்தான். தங்கள் படுக்கையிலேஅலி(றழி) அவர்களைப் படுக்கவைத்து அபூபக்கர் சித்தீக் அவர்களுடன் புறப்பட்டுவிட்டார்கள். தன்நாடு' மனைவி, மக்கள், இனம், சுற்றம் ஆதிய எதுவும் அவர்களுக்குப்பெரிதாகவில்லை. இறைவனுடைய அறிவிப்பே தலைதூக்கி நின்றது, புறப்பட்டுப் போகின்ருர்கள். எதிரிகள் நாயகத் திருமேனியின் வீட்டைச் சுற்றி வளைத்து உள்ளே பார்த்தார்கள். அண்ணலின் படுக்கையில் அலி (றழி) அவர்கள் படுத்துறங்குகின்றனர். அங்கில்லாமையால் வெளியேவந்து பின்தொடர்கின்றனர். வேறுவழியின்றி அண்ணலும் நபியும் அபூபக்கர் சித்தீக்கும் ''தௌர்'' எனுங் குகையுள் ஒழிந்து கொள்கின்றனர், இங்கே, இறைவனின் கட்டளைமூலம் சிலந்திகள் வலைபின்னிக் குகை வாயிலை மூடிவிடுகின்றன. எதிரிகள் குகையைப் பார்த்து சிலந்தியின் வலை

(6-ம் பக்கம் பார்க்க)

சிறுவர் தமிழ்

## கோழிக்குஞ்சு

—வே. குமாரசாமி—

கோழிக் குஞ்சு! கோழிக் குஞ்சு!
குஞ்சுக் குஞ்சுக் குஞ்சு
கோழி கூட்டிக் கொண்டு திரியும்
குளுமை வண்ணக் குஞ்சு!

கறுப்புச், சிவப்பு, வெள்ளை, மஞ்சள்
காணக் காண நெஞ்சில்
வெறுப்பு மாறி அள்ளிக் கொஞ்ச
விரும்ப வைக்கும் குஞ்சு!

புள்ளி ஐந்து வெள்ளை ஆறு
பூவைப் போன்றது ஐஞ்சு
உள்ள மொத்தம் பத்தும் ஆறும்
உடனே எண்ணிக் கொண்டோம்

பஞ்சு போன்ற பசுமை யான
பட்டுப் போன்ற குஞ்சு!
பிஞ்சு விரலாற் பிடித்துத் தம்பி
நசித்துப் போடும் குஞ்சு!

குப்பை மேட்டைக் கிண்டிக் கிண்டிக்
கொள்ளும் உணவைத் தேடி
அப்ப டியே உழைத்து நாமும்
ஆள்வோம் உலகைத் தானே!

### பாட்டாளியின்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அனைவரும் ஒன்றென்னும் நினைவை உறுதிப்படுத்தும்

யாழ் இன்ஸ்டிடியூட்

ஜி. சி. ஈ. விஞ்ஞானம், கலை, வர்த்தகம். மார்கழி பரீட்சைக்கான வகுப்புகள் 3-ம் திகதி ஆரம்பமாகிறது. தட்டெழுத்து, சுருக்கெழுத்து, கணக்குப் பதவியல், சிங்களம், ஆங்கிலம். தினசரி காலை, மாலை, இரவு வகுப்புகள். 29, பருத்தித்துறை ரோட்டு, யாழ்ப்பாணம். 1550

### என் வாழ்வில் ஒரு நாள்—(10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெற்றி பெறுபவர்

இதை எழுதி பத்து ரூபா பரிசை தட்டிக் கொண்டு போகிறவர் அ. த. சுந்தரலிங்கம், அல்வாய் தெற்கு, அல்வாய்.

பின்வரும் கவிதையும் பாராட்டுக்குரியது என்று போட்டிக் குழு முடிவுசெய்தது.

கும்பிட்டு சிரித்துப் பேசி குலவுவார் அளவளாவி
நம்மொழி இனம் தாய் நாட்டில் நாட்டமுற்
றெழுவார் கூவி
செம்மையாய் பிறரைத் திட்டி தீர்ப்பர், ஆனால்
தாம்கொண்ட
தம்கொள்கை தெளிவு பண்ணார், தான்தோன்றி
தேர்தற் காளான்
எம்பிக்கள் எலக்ஷனில்பின் பிவர் அட்றஸ்
முயற்கொம்பாமே!

இரண்டாவது விகடகவிதைப் போட்டிக்கு உங்கள் கவித்திறனையும் கற்பனையையும் தீட்டிவைத்துக்கொண்டு எழுதுங்கள் பார்க்கலாம்.

### நிபந்தனைகள்

ஒவ்வொரு போட்டிக்குரிய விடையும் அதற்குரிய கூப்பனுடன் இணைத்து அனுப்பப்படவேண்டும். விடைகள் 4-5-69க்கு முன் பொதுஅறிவுப் போட்டி (2), 'ஈழநாடு', த. பெ. இலக்கம் 49 யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு வந்துசேர வேண்டும். ஒருவர் எத்தனை விடைகளையும் அனுப்பலாம். ஆனால் ஒவ்வொன்றுடனும் கூப்பன் இருக்கவேண்டும் போட்டிக் குழுவின் தீர்ப்பே முடிவானது.

— கூப்பன் —

**'ஈழநாடு' பொது அறிவுப்போட்டி-(2)**

பெயர்..............................................

விலாசம்..............................................

..............................................

திகதி....................

— கூப்பன் —

**'ஈழநாடு' விகடகவிதைப் போட்டி-(2)**

பெயர்..............................................

விலாசம்..............................................

..............................................

...திகதி ....................



# 'உங்களை பாதுகாப்பது நாங்கள்'

என்னை நீங்கள் பார்த்திருக்கவேண்டிய அவசியமுமில்லை; என்னைப்பற்றி தெரிந்திருக்கவேண்டிய அவசியமுமில்லை. என்னைக் கண்டால் 'சீ, வண்டே!' என்று காலால் தட்டிவிட்டுப்போய் விடுவீர்கள். ஆனால் நான் உங்களுக்குச் செய்யும் நன்மையைப்பற்றி நீங்கள் அவசியம் அறிந்திருக்கவேண்டும். அதற்காகவே உங்களுக்குப் பேட்டி கொடுக்க முன்வந்திருக்கிறேன்.

என்னுடைய சீவியம் பெரும்பாலும் இரவு நேரத்திலேயே நடக்கிறது. ஆனதன்மையினால் தான் நீங்கள் என்னை அதிகம் சந்திப்பதற்கு வசதி இல்லாமற் போய்விடுகிறது. இரவு

**சொன்னது:**
**கருவண்டு**

நேரங்களில் ஆடு மாடு முதலிய பிராணிகளின் சந்தடி இல்லாத சமயத்தில்தான் நாங்கள் இரைதேடுவதும், குடும்ப வாழ்க்கை நடத்துவதும்.

நேற்றிரவு நடந்த ஒரு சம்பவத்தை நான் உதாரணத்துக்காக கூறுகிறேன். நேரம் பத்துமணியிருக்கும். நீங்கள் எல்லோரும்ஒன்றுகநித்திரை போய்விட்டீர்கள். உங்கள் தோட்டத்தில் ஒரு மணம் வீசியது. அது உங்களுக்கு துர்நாற்றமாய் இருக்கலாம். ஆனால் எனக்கோ அதுதான் உயிரும் உடலும். அந்த மணத்தைப் பிடித்துக் கொண்டு வந்து சேர்ந்து விட்டேன்.

ஒரு சிறிய பூனைக்குட்டி செத்துக்கிடந்தது. அடுத்த நாள் காலையில் அதைவெட்டிப்புதைக்க வேண்டுமென்று நினைத்துக்கொண்டு நீங்கள் போய்விட்டீர்கள். ஆனால் அந்தப் புதையல் வேலையை நானே செய்து முடித்துப் போட்டேன். எப்படித் தெரியுமோ. அதுதான் கதை.

எனக்கு அந்த செத்த பூனையின் மணம் வந்ததல்லவா? உடனே 'டபார்' என்று ஸ்தலத்துக்கு வந்துவிட்டேன். வந்ததும் என் தொழிலை ஆரம்பித்தேன். பூனைக்குட்டி உங்கள் தோட்டத்தில் கரடுமுரடான ஓர் இடத்தில் கிடந்தது. அதைத் தூக்கிகொண்டு போய் புதைக்கவேண்டியது என்னுடையவேலை. விர்ரென்று மோப்பம் பிடித்துக் கொண்டே பூனையின் பிரேதத்தில் வந்து உட்கார்ந்தேன். அந்தப் பிணத்தை நாலைந்துதடவை சுற்றுமுற்றும் வளையம்போட்டு சோதித்துப் பார்த்தேன். அதை எப்படி புதைக்கலாம் என்பது என்னுடைய கருத்து. என்னுடைய ஆறு கால்களாலும் வாய்நுனியில் உள்ள உணர்வூட்டிகளாலும் தொட்டுத்தொட்டுப் பதம் பார்த்தேன். அந்தச் சமயம் பார்த்து எனக்கு உதவியாக என்னுடைய துணைவியும் வந்துவிட்டாள்.

நான் உடனே பூனைக்குட்டியின் செத்த சடலத்துக்குக் கீழே புகுந்தேன். அது இருந்த இடம் அடக்கம் செய்வதற்கு உகந்ததாக எனக்குத்தோன்றவில்லை. தூர்வையான மண் உள்ள இடத்தில்தான் அதைப் புதைக்கவேண்டும். தோளைக் கொடுத்து கால்களை நிலத்தில் வறுகிக்கொண்டு ஒரு தடவை உன்னிப்பார்த்தேன். சடலம்சற்றேஅசைந்தது. இப்படியே நிலத்தை வறுகி வறுகி சடலத்துக்கு கீழே போனவுடன் அதை தூக்கி எழும்பக்கூடிய சக்தி வந்துவிட்டது.

இந்தச் சந்தர்ப்பத்தில் உங்களுக்கே தெரியாத ஒரு சின்ன இரகசியத்தை நான் சொல்ல விரும்புகிறேன். மல்லாந்துபடுத்துக்கொண்டு உங்கள் இரண்டு கால்களையும் மேலே தூக்கி வைத்துக்கொண்டீர்களானால் அவற்றின் மீது நீங்களே அதிசயிக்கக்கூடிய வண்ணம் பெரிய பாரங்களைத் தாங்கிக்கொள்ள முடியும். உங்களுக்கு ஆக இரண்டே இரண்டு கால்கள். எனக்கோ ஆறு கால்கள், முதுகுபடிய மல்லாந்துகொண்டு என்னுடைய ஆறு கால்களையும் தூக்கி மேலே வைத்துக் கொண்டு என்னால் பல சாஹசங்களைப் புரிய முடியும்.

இந்தப்பூனைக்குட்டியையும் அப்படித்தான் செய்தேன். அது அங்குலம் அங்குலமாக சரிந்து புரண்டது. இதற்கிடையில் எனது துணைவி வந்துவிட்டாள் அல்லவா? நான் தூக்கிக்கொடுக்க அவள் இழுக்க அந்தச் சடலத்தை நாங்கள் சுமார் மூன்றடி தூரத்துக்கு நகர்த்திக்கொண்டு போய்விட்டோம். சில சமயங்களில் இதற்கு மேலும் போகவேண்டிவரும். ஆனால் நாங்கள் சளைக்கவேமாட்டோம். பத்தடி தூரத்துக்கு அந்தப் பிரேதத்தைக் தூக்கிக் கொண்டு போய் புதைக்க வேண்டுமானாலும் நாங்கள்

**எழுதியது:**
**வி. என். பி.**

இருவரும் ஐந்து அல்லது ஆறு மணி நேரமாவது பாடுபட்டு நாம் விரும்பிய இடத்துக்கு அதைக் கொண்டு போய்ச் சேர்த்துப்போடுவோம்.

நாங்கள் போகும் வழியில் எத்தனையோ இடையூறுகள் உண்டாகும். சிறு சிறு கற்கள், மரச்சுள்ளிகள், வேர்கள் எல்லாம் தடையாக இருக்கும். அவ்வப்போது எனது துணைவி வேகமாகச் சென்று அந்தத் தடைகளை நீக்கிவிடுவாள். சிறிய மரவேர்த்துண்டுகள் குறுக்கே வந்துவிட்டால் அவள் பதைபதைத்து ஓடிப்போய் அவற்றை ஒதுக்கி வழியை ஒதுக்கிவிடுவாள்.

இந்த விதமாகத்தானே நாம் இருவரும் அந்தச் சடலத்தைக் கொண்டுபோய் நாங்கள் தெரிவு செய்து வைத்திருக்கும் புதையல் பூமிக்கு போனதும், இரவு இரவாக நிலத்தைத் தோண்டி, காலையில் சூரியன் உதயமாவதற்கு முன்பு பூனைக்குட்டியை அடக்கம் செய்துவிடுவோம். அதற்குப் பின் அந்த சடலம்தான் எங்களுக்கு ஆகாரம். சிறிது சிறிதாக அதை உண்டு முடிப்பதற்குள் என் துணைவி கர்ப்பவதியாகி முட்டைகள் இட ஆரம்பிததுவிடுவாள். அவை பொரித்து சிறிய புழுக்களாக வெளிப்படும். அவற்றிற்கும் பூனைக்குட்டியே ஆகாரம். புழுக்கள் பெரிதாகி வண்டுகளாக மாறிய பின்பு அவை சுயாதீனமாக புறப்பட்டு தத்தம் வாழ்க்கையை நடத்துவார்கள், எங்கள் கடமை முடிந்துவிடும்!

தோட்டம் துரவுகளில் தினமும் பல பிராணிகள் இறந்து செத்துக்கிடக்கும். இவை எலலாம் எங்கே மாயமாக மறைகின்றன என்று நீங்கள் ஆச்சரியப்பட்டிருப்பீர்கள். பூனைக்குட்டியைப்போல நாய்களும் எலிகளும் பறவைக்குஞ்சுகளும் சதாமரித்துக்கொண்டேயிருக்கின்றன. அவற்றை எல்லாம் அடக்கம் செய்து உங்களுடைய சுகாதாரத்தைப் பாதுகாப்பவர்கள் நாங்கள்தான் என்பதை இதற்குமுன் நீங்கள் உணர்ந்ததுண்டா?

---

… சாய்ப் பிரசாரஞ்செய்தும் செய்வித்தும் வந்தனர். எவ்வளவு தூரம்வைராக்கியமனதுடன் இறைதூதை ஏற்றிவைக்க முயற்சிசெய்தார்களோ அவ்வளவு தூரம் அவர்களை ஒழித்துக்கட்டவும் எதிரிகள் முயற்சிசெய்தார்கள். ஒருமுறை உமரே பாறூக் (றழி) அவர்கள் இஸ்லாத்தைத் தழுவுமுன்னர் எதிரியாய் இருந்தபோது தனது சகாக்களைப்பார்த்து ''ஏ, மடையர்களே உங்கள் வீரம் எங்கே குலமதிப் பெங்கே, இந்த அநாதை முஹம்மதுவைக் கொல்ல முடியாமல் ஏதேதோ திட்டம் வகுக்கிறீர்களே; இதோ தெய்வத்தின்மீது ஆணையாக நான் எனது வாளால் வெட்டித்தலையைக்கொண்டு வருகிறேன்'' என்று சத்தியஞ்செய்துவிட்டு வாளையுருவிக்கொண்டு வேகமாய் ஓடிப்போய் வெட்டுங்கரத்தால் நாயகத்திருமேனியின் கையைப்பிடித்துக் கலிமாவை மொழிந்து இஸ்லாமாகிவிட்டாரென்றால் அதைச் செய்த சக்தி எது? அதுதான் இறைவனுடைய அற்புத சக்தி ஆகவேதான் நாம் கூறுகின்றோம் இறைவனை முற்றாக நம்பி முழுமனதுடனே நேசியுங்கள். அவன் நமது தேவைகளை அழகான முறையிலே வழுவின்றிப் பூர்த்திசெய்வான். இதைத்தான் அண்ணல் நபி, விண்ணுலக யாத்திரை சென்ற நபி (ஸல்) அவர்கள் எடுத்தோதும்போது இன்னல் பல நேர்ந்தன. கல்லெறிந்தனர், பாத

---

## பாட்டாளியின்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அனைவரும் ஒன்றென்னும் நினைவை உறுதிப்படுத்தும் வகையில் செங்கொடிகளாக உயர்த்தப்பட்டன. இன்று பாட்டாளிகளின் உரிமைக்காக பட்டொளி வீசிப் பறக்கும் செங்கொடியின் ஆரம்பக்கதை இதுதான்.

இன்று மேதினத்தை இருபது தொழிலாள அரசுகள் கொண்டாடுகின்றன. மாஸ்கோ தொடங்கி கியூபாவரை அரச அணிவகுப்புக்கள் இவ்விழாவை அலங்கரிக்கின்றன. இந்த நிலையை மேதினம்தான் தந்தது,

மேதினத்தின் பெருமை பற்றி உலக வழக்கிலுள்ள மொழிகள் யாவும் வாழ்த்துரைவழங்குகிள்றன. வீரம் மிக்க பாட்டாளித் தோழனின் உள்ளக்குமுறல்களுக்குச் சாந்திகாணும் மார்க்கமாக மேதினம் அமைகிறது. மேதினத்தின் புதிய தீர்மானங்கள, அரசியல் சுலோகங்கள், உழைக்கும் மக்களின் உயிர்த்துடிப்பை, வாழ விரும்பும்வேட்கையை போராடும் போக்கை நினைவுறுத்தும் வகையில் அமைகின்றன இத்தகைய புனித நாள் பாட்டாளி வர்க்கத்தின் வரலாற்றில் ஒரு பிரதான வளர்ச்சிக்கட்டத்தை நினைவுபடுத்துகின்றது. இலங்கையில் இப்பாட்டாளிகளின் பொன்னாள் திரு. எஸ். டபிள்யூ. ஆர் டி. பண்டாரநாயகாவின் ஆட்சிக்காலத்தில் அரச விடுமுறைத் தினமாக்கப்பட்டது. பொங்கல் திருநாளை இந்துக்களும், வெசாக் பண்டிகையை பௌத்தரும், நபி நாயகத்தின் (ஸல்) நினைவை நமது இஸ்லாமிய சகோதரர்களும் கொண்டாடுகின்றனர். மற்றும் ஒவ்வொரு பண்டிகையும் விழாக்களும் இன, மத அடிப்படையிலேயே நம் நாட்டில்அமைந்துள்ளன. அவ்வாறில்லாத ஒரேயோரு தேசிய திருநாள் உண்டென்றால்அதுமேதினம் என்று சொல்லாமலேபுரிந்து கொள்ளமுடியும். இலங்கையில் இன்று சகல கட்சியினரும் மேதினத்தை கொண்டாட முன்வந்துள்ளனர். உழைக்கும் மக்கள் அனைவரும் வர்க்கத்தால் ஒரே நலன் கொண்ட கூட்டத்தைச் சார்ந்தவர்கள். இவர்களுக்கு வாயும், வயிறும் மாத்திரமின்றி துன்பமும், துயரும்கூடப் பொதுவானதே என்ற உண்மை உணரப்பட்டு, பாட்டாளியின் சுதந்திரத்திற்கு வித்திட்ட மேதினம் பாட்டாளி வர்க்கத்தின் ஒரு பொன்னாள்.

---

… ஆங்கிலம். காலை, மாலை, இரவு வகுப்புகள். 29, பருத்தித்துறை றோட்டு, யாழ்ப்பாணம். 1550

### தேவை

யாழ்ப்பாண நகரிலுள்ள தனியார் ஆஸ்பத்திரி ஒன்றுக்கு பதிவு செய்யப்பட்ட பெண் தாதி உடன் பதவியேற்கத் தேவை. தங்கும் இடவசதி உண்டு. தகைமை, அனுபவத்திற்கேற்ப சம்பளம் வழங்கப்படும். விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 984, Co 'ஈழநாடு லிமிட்டெட்', யாழ்ப்பாணம். 984

பேக்கர்

பாண், கேக்வகைகள் மற்றும் சுவீற்ஸ் தினிசுகள் தயாரிக்கக்கூடிய நல்ல அனுபவமுள்ளவர் நேரிலோ அல்லது கடிதமூலமோ அத்தாட்சிப் பத்திரங்களுடன் உடனே விண்ணப்பிக்கவும். கே. செல்வநாயகம், 2 A, கச்சேரி ஒழுங்கை, யாழ்ப்பாணம். 983

G. C. E. (O. L.) மாணவிகட்கும், கீழ்வகுப்பு மாணவிகட்கும் கணிதமும் (maths) ஆங்கிலமும் கற்பிக்கக்கூடிய ஆசிரியை தேவை. உடனே விண்ணப்பிக்கவும். காரியதரிசி, வட மாதர் கலா மன்றம், நெல்லியடி, கரவெட்டி, 979

நெசவு செய்வதில் அனுபவமுள்ள பெண்கள் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும். கருணை நெசவுநிலையம், 'கண்ணகிரி'', இடந்தரை ஒழுங்கை, காங்கேசன்துறை. 974

### விற்பனைக்கு

காணி- அச்சுவேலி தெற்கு ''பங்கிரானை'' என்னும் 95 பரப்புக்காணியில் எட்டில் ஒரு பங்கு. எல்லை கிழக்கும் தெற்கும். இராமலிங்கம் பெண் தங்கரத்தினத்திற்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், வடக்கு ஊரெல்லைத்தெரு, மேற்கு யோன் இராசாவின் ஆதனம் விபரங்களுக்கு எஸ். தம்பு, கொடிகாமம். 985

### வாடகைக்கு

மூளாய் கூட்டுறவு ஆசுப்பத்திரிக்கு முன்பு நல்ல நிலையிலுள்ள கடை வாடகைக்கு உண்டு. நேரில் சந்திக்கவும். S. ஆறுமுகம், மூளாய், சுழிபுரம், 977

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேதினம் + வெசாக + தி. மு. க + சமஷ்டிக்கட்சி + வகுப்புவாதம் = அரசியல்

## வார சாரம்

இன்று வெசாக் பெருநாள். இதே சமயம் இன்றுதான் உலகத் தொழிலாளர் திருநாளான மே தினமுமாகும். மே தினமும் விசாகத் திருநாளும் ஒரே தினத்தில் வருவது புதினமல்லவென்றும் பதினைந்து வருடங்களுக்கு முன்னர் இருவைபவங்களும் ஒரே தினத்தில் வந்து கொண்டாடப்பட்டிருக்கின்றனவென்றும் இலங்கை சீனச்சார்பு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. சண்முகதாசன் கூறுகிறார்.

பௌத்தமதம் உற்பத்தியானது இந்தியாவில்தான். ஆனால் அதை இன்று பின்பற்றுகிறவர்களின் தொகை இந்தியாவைவிட பர்மா, தாய்லாந்து, கம்போடியா, லாவோஸ், ஜப்பான், வியட்நாம், இலங்கை ஆகிய இடங்களில் தான் அதிகம். சீனாவிலும் பௌத்தம் பின்பற்றப்படுகிறது. ஆனாலும் பௌத்த மதத்தைப் பின்பற்றும் நாடுகளுக்கிடையிலும் கலாசாரம், மொழி வேறுபாடுகள் இல்லாமலில்லை. அரசியலிலும் இந்த 'பௌத்த நாடுகளுக்கிடையில்' வேறுபாடுகள் பலவுண்டு. என்றாலும் உலகத் தொழிலாளர் தினமான மேதினத்தை இலங்கைதைய தவிர்ந்த இந்த பௌத்த நாடுகள் எப்படிக் கொண்டாடுகின்றன என்பது தெரியவில்லை. அது ஒரு பிரச்னையாக இதுவரை கிளம்பவும் இல்லை. இதற்கு அந்த நாடுகளின் அரசியல் அமைந்துள்ள முறைகளைக் காரணமாக காட்டலாம்.

மேதினத்தைப் பொறுத்தவரையில் உலகத் தொழிலாளர்களை ஐக்கியப்படுத்துவது மே தினத்தின் நோக்கம். உலகத் தொழிலாளர் ஒன்று பட்டிருக்கின்றனரா? சோஷலிஸ நாடுகளிலுள்ள தொழிலாளரின் நிலைவேறு, ஜனநாயக சோஷலிஸம் என்று கூறிக்கொள்ளும் இரண்டும் கெட்டான் நிலையிலுள்ள நாடுகளிலுள்ள தொழிலாளரின் நிலைவேறு.

உலகத் தொழிலாளரை விடுவோம். நமது நாட்டுத் தொழிலாளரை மட்டும் கணக்கிலெடுத்துப்பார்ப்போம். நமது நாட்டில்தான் எத்தனை தொழிற்சங்கங்கள்? ''உலகத் தொழிலாளர்களேஒன்றுபடுங்கள்'' என்று ஒவ்வொரு மேதினத்திலும் பொது மேடைகளில் கூவி அழைப்பவர்களும், ஊர்வலங்களில் கோஷம் இடுபவர்களும் வருடா வருடம் பிரிந்து கொண்டிருக்கிறார்கள். ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற் சங்கம் என்றிருந்தால் தொழிலாளரிடையே ஒற்றுமை நிலவுவதற்கு வாய்ப்பேற்படும். இங்குதான் மிகக் குறைந்த அங்கத்தவர்களுடனேயே ஒரு தொழிற் சங்கம் ஆரம்பிப்பதற்குச் சட்டம் இடம் கொடுக்கிறதே! இனத்தால் பிரிந்த தொழிலாளிவர்க்கம் இப்போது மதத்தாலும் பிரிக்கப்பட நல்ல சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது.

மொழிப் பிரச்னையில் தொழிற் சங்கங்களைக் கூறுபோட முடியுமென்பதைக் கண்டவர்கள் மே தினத்தையும் சமய சம்பந்தமான விசாக பண்டிகையையும் வைத்து தொழிலாள வர்க்கத்தை கூறுபோடுவது கஷ்டமா? இதற்கு யாரையும் குறை கூறிப்பயனில்லை. தொழிலாளரும் தொழிற் சங்கங்களும் தமது வாழ்வையும் எதிர் காலத்தையும் அரசியல் வாதிகளினதும் அரசியல் கட்சிகளினதும் கட்டுப் பாட்டில் விட்டிருப்பதுதான் இதற்கு முக்கிய காரணமாகும்.

எப்படியோ, எந்தநோக்கத்தைக் கொண்டோபுனிதமான விசாக தினத்தை மேதினத்துடன் கலந்து மேதினக் கொண்டாட்டம் சம்பந்தமாக ஊர்வலமோ, பொதுக் கூட்டங்களோ நடத்துவதற்கு அனுமதி மறுக்கப்பட்டு விட்டது. அனுமதி தந்தாலும் தராவிட்டாலும் மேதின ஊர்வலமும் கொண்டாட்டமும் நடத்துவோம் என்றவர்களில் சிலர் அடங்கி விட்டார்கள். அவர்கள் அவ்விதம் செய்ததில் குறை சொல்ல இடமில்லை.

ஐக்கிய தேசிய கட்சி எனப்படும் யு. என் பி. தமிழ் காங்கிரஸ், தமிழ் அரசுக் கட்சி ஆகியவைகள் தமது கட்டுப்பாட்டின் கீழ் தொழிற் சங்கங்கள் ஆரம்பித்த போதும், அவை மே தின விழாக்களைக்கொண்டாடத் தொடங்கிய போதும் ''இவர்களெல்லாம் தொழிலாளர்களுக்காக மாய்மாலக் கண்ணீர் விடத் தொடங்கி விட்டனவா? இவர்களுக்கு மே தினம் கொண்டாட என்ன உரிமை இருக்கிறது? என்று கேட்ட இடது சாரிகள் டலர் மேதினயான மே மாதம் முதல் திகதியன்று மே தினத்தைக் கொண்டாடக் கூடாதென்றும் இப்படிக் கொண்டாடுவது பௌத்த மதத்துக்கு அவமதிப்புச் செய்வதாகுமென்றும் கூறப்பட்டது. அடுத்த தேர்தலில் வாக்குகளைப் பெறுவதைக் கருத்தில் கொண்டு எதிர்ப்புக் குரல் கொடுக்கவில்லை.

பீகிங் சார்பு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. சண்முகதாசன் மட்டும் ''மேதினமும் ஒரே நாளும் ஒன்றாகக் கொண்டாடினால் என்ன கெட்டுவிடும்?'' என்று குரல் கொடுக்கிறார். ஆனால் ஆட்சி மன்றத்தில் பிரதிநிதியாக இருக்கும் அதே கம்யூனிஸ்ட் கட்சியைச்சேர்ந்த கம்பகா எம். பி. திரு. எஸ். டி பண்டாரநாயகா இதுபற்றிக் குரல் எழுப்பியதாகத் தெரியவில்லை.

யாழ்ப்பாணத்திலாவது மே மாதம் முதல் திகதியன்று மேதின விழாவை நடத்த அனுமதித்தாலென்ன என்ற தொனியில் ஆட்சி மன்றத்தில் வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு. அமிர்தலிங்கம் கேட்டகேள்வியொன்றுக்குப் பிரதமர் ''வேல் விழாவை'' உதாரணம் காட்டிப்பேசியது பிரதமர் என்ற முறையில் அவர் அதைச் சொல்லியிருக்கக் கூடாது என்றாலும் அவரும் ''ஓர் அரசியல்வாதி'' என்ற அளவில் அவரது வாதம் சரிதான் என்று ஏற்றுக்கொள்ளத் தானே வேண்டும்.

ஆனாலும் மேதினத்தை விசாக தினத்துடன் கலந்து சமயசம்பந்தமான விவகாரமாக்கியதிலிருந்து இந்நாட்டின் பெரும்பான்மைச் சமூகத்தவரான பௌத்த மதத்தவரின் வெறுப்பைத் தேடிக் கொள்ளாமல அவர்களுடைய நல்லெண்ணத்தைப் பெறும் வகையில் மே மாதம் முதல் திகதியன்று மேதினவிழாவைக் கொண்டாடுவதில்லையென தமிழரசுக்கட்சியினர் செய்தமுடிவு விவேகமானதென்றே சொல்லவேண்டும்.

''தி. மு. க.'', ''நாம் தமிழர்'' என்ற பூச்சாண்டி காட்டி அதைத் தமிழரசுக் கட்சியினருடன் தொடர்புபடுத்தி இந்நாட்டில் வாழும் தமிழ் மக்களுக்கெதிராக பெரும்பான்மை மக்கள் மனதில் விஷத்தைத் தூவி, துவேஷத்தை ஏற்படுத்த சில தீவிரவாதிகளும் விஷமிகளும் முயன்று வரும் இச்சமயத்தில் விசாக [illegible]னத்தன்று மேதின விழாவை தமிழரசுக்கட்சி கொண்டாடினால் அதை ஒரு மதப் பிரச்னையாக்கவும் அதன் மூலம் 'இலாபம்' தேடவும் பலர் காத்திருப்பார்[illegible]ளன்பது தெளிவு. ''தமிழரசுக்

அரசியல் நிருபர்

## மலையகத்துக்கு மின்சார வசதி

கண்டி, புதன்

மலையகப் பகுதிகளில் மின்சார வசதிகளை ஏற்படுத்துவதற்குஉள்ளூராட்சிஅமைச்சர் திரு. ஆர். பிரேமதாசா தீர்மானித்துள்ளார். இதற்கான நடவடிக்கைகளைத் தாம் மேற்கொண்டுள்ளார்.

மலையகத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் அங்குள்ள மக்கள் மின்சார வசதியின்றி அவதியுறுவதை அமைச்சருக்குப்பல தடவை சுட்டிக் காட்டியதைத் தொடர்ந்து மேற்படி நடவடிக்கையை அமைச்சர் மேற்கொண்டுள்ளார். மலையகத்திலுள்ள பல சிறிய நீர் வீழ்ச்சிகளைபயன்படுத்தி அவற்றின் மூலம் மின்சக்தியை அவ்வப்பகுதிகளிலுள்ளமக்களுக்கு வழங்க அமைச்சர் முடிவுசெய்துள்ளார்

### சம்பந்தர் விழா

கோப்பாய், புதன்

கோப்பாய் திருவருள் தவநெறி மன்றம் எதிர்வரும் ஜூன் முதல் வாரத்தில் ஞானசம்பந்தர் விழாவை மிக விரிவான முறையில் கொண்டாடவுள்ளது. ஞானப்பால் உற்சவம் திருமுறை இசைகச்சேரி சொற்பொழிவுகள் சங்கீதகதாப் பிரசங்கம் முதலியன நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### திரும்புகிறார்

கோப்பாய், புதன்

சுகவீனங் காரணமாக இருமாதகால ஓய்வில் மலேஷியா சென்றிருந்த கோப்பாய் எம் பி. திரு சி, கதிரவேலுப்பிள்ளை மே மாத முதல் வாரத்தில் யாழ்ப்பாணம் திரும்புவார்.

### காணிக் கச்சேரி

கோப்பாய், புதன்

யாழ் மாவட்டத்திலுள்ள கனகாம்பிகைகுள குடியேற்றத்திட்டத்துக்கான காணிக் கச்சேரி எதிர்வரும் மேமாதம் 19-ம் திகதியன்று வலிகிழக்கு காரியாதிகாரி கந்தோரில் நடைபெறவுள்ளது. இக் காணிக்கென வலிகிழக்குப் பகுதியிலிருந்து சுமார் 400க்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் சேர்ந்துள்ளனவாம்.

## பண்டிதர் கோரிக்கை

### போக்கு வரத்து அமைச்சர் சம்மதம்

யாழ்ப்பாணம், வியா.

புகையிரத நிலையங்களில் நிலைய அதிபர்களின்பெயர்ப் பலகைகள் தமிழிலும் எழுதப்பட வேண்டுமென்ற கிளிநொச்சி எம். பி யின் கோரிக்கைக்கு போக்குவரத்து அமைச்சர் சம்மதம் தெரிவித்துள்ளதாகத் தெரிகின்றது.

சகல புகையிரத நிலையங்

### மீண்டும் ஆரம்ப

அனுராதபுரம், புதன்

பொலநறுவை மாவட்டத்தில் இதுகாலவரை மழை பெய்யாத காரணத்தால் தடைபட்டிருந்த இவ்வருடத்துக்கான பெரும்போக நெற்செய்கை சமீபத்தில் இப் பகுதியில் பெய்த பெருமழை காரணமாக மீண்டும் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

## ஆசிரியர்க்கு ஆசான் திரு. அரசரெத்தினம்



(நல்லூர் ஆசிரியபயிற்சிக் கலாசாலைஅதிபர் திரு. ஜே. ஜி அரசரெத்தினம்பயிற்றப் பட்ட ஆங்கில முதலாம் தரா [illegible]

[illegible]ருந்தன. ஒருமையாக இருந்த விடுதியறை இங்கு பயிற்சிக்கு வந்த ஆசிரிய மாணவிகளுக்கே தஞ்சம் வழங்கியது. இச்சூழ்நிலையில் [illegible]

இப்பெரியாரின் சேவைக் காலம் இக்கலாசாலை வரலாற்றின் ஒரு தனியுகம். என்று கூறினாலும் மிகையாகாது. ஆரம்பகாலத்திலிருந்து [illegible]


ராஜா 108வதுதினம் (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா நடித்த
ஒளிவிளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)
மாதர்களுக்கு அரைக்கட்டணம்

REGAL at JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p m.
Poya, Pre-Poya 10-30 A.M.
Kirk Douglas
Richard Harris
in
THE HEROES OF TELEMARK

இணுவில்
ஸ்ரீ காலிங்கன்
தினசரி: 6-30, 9-30 மணி
பிரிபோயா, போயா 2-30மணி
ஜெய்சங்கர் - சோ நடித்த
லகிரி எக்ஸ்பிரஸ்

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7& 9-45 P.M.
Poya, Pre-Poya 10-30a. m.
John Mills, Hayley Mills
in
THE FAMILY WAY
(Teanage Story)

மானிப்பாய
வெஸ்லி சினிமா
தினசரி 6-30, 9-30 மணி
பிரிபோயா, போயா 2-30 மணி
சிவாஜி - சௌகார்ஜானகி நடித்த
பார் மகளே பார்

ராணி
[யாழ்ப்பாணம்)
[தினசரி 3காட்சிகள்]
ஜெய்சங்கர்
விஜயகுமாரி நடித்த
ஜீவனாம்சம்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

(நல்லூர் ஆசிரியபயிற்சிக் கலாசாலைஅதிபர் திரு.ஜே. ஜி அரசரெத்தினம்பயிற்றப் பட்ட ஆங்கில முதலாம் தராதரப்பத்திரம், பீ.ஏ., (இலண்.) எம்.ஏ. (பிறின்.) தமது பதவியிலிருந்து ஓய்வு பெறுகிறார்.)

பதினெட்டு வருடங்களுக்கு முன் திரு. அரசரெத்தினம் அவர்கள் நல்லூர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் அதிபராக பதவியேற்றபோது, கலாசாலையின் மாணவர் தொகை இருபத்தொன்பதாகவும் விரிவுரையாளர்களின் தொகை மூன்றாகவும் இருந்தது.

அப்போது இங்கிருந்தகட்டிட வசதிகளோ மிகக் குறைவு. விரிவுரை மண்டபங்கள் ஒரு சில. உணவு மண்டபம்மிகச்சிறிது. விடுதி மண்டபம் ஒன்றே ஒன்று. மின்னொளி வசதியும் தண்ணீர்ச் சேவையும் கவலைக்குரிய முறையில் அமைந்திருந்தன. ஒடுமையாக இருந்த விடுதியறை இங்கு பயிற்சிக்கு வந்த ஆசிரிய மாணவிகளுக்கே தஞ்சம் வழங்கியது. இச்சூழ்நிலையில் ஆண் மாணவ ஆசிரியர்கள் தனிப்பட்ட முறையில் வீடுகளை வாடகைக்கு எடுத்து இருக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

ஆனால் எமது அதிபரின் வருகையுடன் அவர் மேற்கொண்ட முயற்சியின் பயனாக விரிவுரை மண்டபங்கள் பல, விஞ்ஞான ஆய்வு கூடம், அலுவலகம் விரிவுரையாளர்கள் தங்கும் அறை வசதி பல உருவாக்கப்பட்டன. சென்ற ஆண்டு பல்லாயிரக்கணக்கான ரூபா பெறுமதியான கல்லூரியின் சிகரமாகத்திகழும் கட்டிடத்தை தம் செயற்திறமையால் அரசாங்க உதவியைப் பெற்று இவர் உருவாக்கினார். இவரின் முயற்சியால் 1959-ல் ஆண்களுக்கும் ஒரு விடுதிச்சாலை அமைக்கப்பட்டது

இப்பெரியாரின் சேவைக்காலம் இக்கலாசாலை வரலாற்றின் ஒரு தனியுகம் என்று கூறினாலும் மிகையாகாது. ஆரம்பகாலத்திலிருந்து இற்றைவரை வளம் பல கண்டு வளர்ச்சி பெற்றது எமதுகலாசாலை. மாணவர் எண்ணிக்கை இருபத்தொன்பதிலிருந்து எழுபத்தொன்பதாகப் பெருகியது. இலங்கையின் சகலபகுதிகளிலிருந்தும் மாணவர்கள் வரலாயினர்.

நாடக வளர்ச்சியில் அதிபர் அவர்கள் எடுத்தமுயற்சியும் மிகப்பெரியது. மாணவர்கள் எழுதிய நாடகங்கள் அரங்கேற்றப்பட்டு, நாடகத்துறையில் இக்கலாசாலை வரலாற்றில் ஒரு மறுமலர்ச்சியை உருவாக்கியபெருமை எமது அதிபரைச் சார்ந்ததாகும்.


அதிபர் அவர்களுடைய முயற்சியின் பயன் எமது கலாசாலையின் வகுப்பறைகளுடன் மட்டும் நிற்கவில்லை. எமது கலாசாலை மாணவர்களுடைய திறமையை மாகாண ரீதியாகவும், தேசிய சாயலுடனும் ஓங்கிவளரச் செய்ய பல சந்தர்ப்பங்களையும் அமைத்துக் கொடுத்தார்.

வடமாகாண ஆசிரியகலாசாலை விளையாட்டுப் போட்டியின் தலைவராக பணியாற்றியிருக்கிறார். யாழ். சாரணர் இயக்க மாவட்டஆணையாளராகத் தொடர்ந்து பணியாற்றுகிறார். இவருடைய இச்சேவைக்காலத்தில் யாழ். சாரண இயக்கக் குழுக்கள் அகில இலங்கைப் போட்டிகள் பலவற்றில் முதலிடத்தைப்பெற்றன.

இலங்கை - அமெரிக்க சங்கத்தின் யாழ்ப்பாணக்கிளையின் உபதலைவராகவும், தலைவராகவும் சென்ற நான்கு வருடம் இருந்து வருகின்றார்.

யாழ். கிறிஸ்தவ நாடக சங்கத் தலைவரும் மெதடிஸ்த சமய சபையின் ஒரு முக்கிய காப்பாளருமாவார். இச்சபையின் ஸ்தான பிரசங்கியாகவும், மெதடிஸ்த்த சினற் சங்கத்தின் அங்கத்தவராகவும் பல்லாண்டு காலம் தொடர்ந்து இருக்கின்றார். மருதனமடம் கிறித்தவ சேவைஆச்சிரமத்தின் நிர்வாகசபையின் அங்கத்தவராக பல்லாண்டு இருந்தும், 1968-ம் ஆண்டு அதன் தலைவராக இருந்தமையும் இவரின் சமயத் தொண்டிற்கு சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும்.

எமதுகலாசாலை தென்னிந்திய சுற்றுப் பிரயாணத்தை கிரமமாக ஆண்டுதோறும் ஒழுங்காக மேற்கொண்டு மாணவர்கள் கலாச்சார உறவை மேற்கொள்ளுவதற்கு ஒரு சந்தர்ப்பத்தை அமைத்த பெருமை எமது அதிபரைச் சார்ந்ததாகும்.



அமெரிக்கா, இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து, அயர்லாந்து, ஜெர்மனி ஆகியபல நாடுகளிலும் அதிபர் பல சமய சொற்பொழிவுகளை ஆற்றி இலங்கையின் பெருமையை நிலைநாட்டினார்.

சமூகசேவையும் தனது தலையாய பணியாக மேற்கொண்டார். சமூகசேவையில் பல துறைகளில் நீண்ட காலமாக ஈடுபாடுகொண்டுள்ள போதிலும் சிறப்பாக யாழ்ப்பாணம் வை. எம். சீ. ஏ ஸ்தாபனத்தின் கௌரவ காரியதரிசியாகவும், யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் உபதலைவராகவும், இளைஞர் மன்றத்தின் உபதலைவராகவும் செயலாற்றிவருகிறார்.

ம. சிவானந்தன்

---

## தம்மைத் ...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

யால் மூடப்பட்டிருக்கிறது குகை. 'முஹம்மது போயிருந்தால் இந்த வலைகள் அழிந்துபோயிருக்கும். ஆகவே இதற்குள் இல்லை' என்று திரும்புகின்றனர். பின்னர் மதீனா நோக்கி யாத்திரை செய்து மதீனா வாசிகளால் வரவேற்கப்பட்டு உபசரிக்கப்பட்டார்கள். மதீனாவிலே சிறிது ஆதரவு ஆரம்பத்திலேயே இறையருளால் கிட்டியது. இறைவனை மேலும் மேலும் அதிகமாகப் புகழ்ந்துகொண்டேயிருந்தார்கள். எம்பெருமானார் றசூலே கரீம் (ஸல்) அவர்களும் அவர்களது தோழர்களும் படிப்படியாக இஸ்லாத்தைத் தழுவியவர் தொகை முந்நாற்றுப்பதின் மூன்றாயிற்று.

(தொடரும்)

---

தன்று மேதின விழாவை தமிழரசுக்கட்சி கொண்டாடினால் அதை ஒரு மதப் பிரச்னையாக்கவும் அதன் மூலம் 'இலாபம்' தேடவும் பலர் காத்திருப்பார்கள் என்பது தெளிவு. "தமிழரசுக் கட்சியினர் தேசிய அரசாங்கத்திலிருந்து வெளியேறினாலும் தேசிய ஐக்கியத்தைக் காட்பாற்றுவதிலும் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பேணுவதிலுமுள்ள நம்பிக்கையையும் இலட்சியத்தையும் தேசிய அரசாங்கம்விட்டுவிடவில்லை" என்று பிரதமர் ஆளும்கட்சிக் கூட்டத்தில் தெரிவித்திருந்தார்.

இதே சமயம் பௌத்த மக்களின் உணர்வை அறிந்து விசாக தினத்தன்று மேதின விழாவைக்கொண்டாடுவதில்லையென தமிழரசுக் கட்சியின் மேலிடம் செய்த முடிவும் "தேசிய அரசாங்கத்திலிருந்து வெளியேறினாலும் தேசிய ஐக்கியத்தில் உள்ள நம்பிக்கை சிதறவில்லை" என்பதைப் பிரதிபலிப்பதாக இருக்கவேண்டும்.

நாட்டின் இன்றையஆளும் கட்சியினரான முன்னைய எதிர்க்கட்சியினரும் சரி, முன்னைய ஆளும்கட்சியினரான இன்றைய எதிர்க்கட்சியினரும் சரி மற்றும் ஆட்சிபீடத்திலமரவேண்டும் அல்லது பலம் வாய்ந்த எதிர்க்கட்சியாக விளங்கவேண்டும் என விரும்புவோரும்சரி 'சமஷ்டி' என்றால் 'நாட்டைத் துண்டாடுவது' என்றும் "தென்னிந்தியாவுடன் இலங்கையின் ஒரு பகுதியை இணைத்து அகன்ற தமிழ் ராஜ்யம் அமைக்கும் நோக்கமுடையது" என்று பிரசாரம் செய்கின்றனர். சமஷ்டிக் கோரிக்கையைத் தமிழரசுக்கட்சியினர் கைவிடும் வரை, சமஷ்டிக்கட்சியை தமிழ் மக்கள் ஆதரிக்காமல் விடும்வரை தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளையும்கூட பெரும்பான்மைச் சிங்கள மக்கள் சந்தேகத்துடன்தான் நோக்குவார்கள் என்று சமீபத்தில் இடதுசாரிக் கட்சித்தலைவர் ஒருவர் தெரிவித்திருந்தார். இதே கருத்தை ஆளும்கட்சியினர் சிலரும் மற்றும் சிலரும் வேறு தொனியில் வெளியிட்டிருந்தனர். சமஷ்டிக் கோரிக்கையை தமிழரசுக்கட்சி கைவிடட்டும் என்று வேறு பலரும் கூட ஆலோசனை கூறினர். தமிழ் நாட்டில் திராவிட முன்னேற்றக்கழகம் சந்தர்ப்பமறிந்து "திராவிட நாடு" கோரிக்கையை விடுத்து அதன்மூலம் ஆட்சிபீடத்திலமர்ந்து அரும்பெரும் சாதனைகளைச் செய்திருப்பதால் அத்தகைய அறிவும் அரசியல் ஞானமும் தமிழரசுக் கட்சியினருக்கும் ஏற்பட்டு சமஷ்டி இலட்சியத்தை அடைவதற்கு அந்தப்பெயரையேவிட்டுவிட முன்வருவதும் அதைவிடுத்து இலட்சியத்தை விடமுடியாது என்று பிடிவாதமாக இருப்பதும் வேறு விஷயம்.

ஆனால் சமஷ்டிக் கோரிக்கையும் சமஷ்டிக் கட்சிக்கு தமிழ் மக்கள் ஆதரவளித்து வருவதும்தான் தமிழ் மக்களின் உரிமைகளைப் பறிப்பதற்கும் அவர்களுடைய கோரிக்கைகளை மறுப்பதற்கும் காரணம் என்று சொல்லாமல் சொல்லுவது நியாயமாகாது.

சமஷ்டி கட்சி தேசிய அரசாங்கத்திலிருந்து விலகிவிட்டது. 'பிரிவினை' கோராத, ஒற்றையாட்சி அமைப்பில் தேசிய ஐக்கியத்தை நிலைநாட்ட முடியுமென்ற நம்பிக்கையுள்ள தமிழ்க் காங்கிரஸ் இன்னும் தேசிய அரசாங்கத்திலுள்ளது. தமிழ் மக்களுக்கு நன்மையான, அவர்களுடைய நியாயமான உரிமைகளை நிலைநாட்டக்கூடிய கோரிக்கைகளை, தேவைகளை தேசிய அரசாங்கம் இப்பொழுதாவது நிறைவேற்றமுடியாதா? முன்னைய அரசாங்கமும் தமிழ் அரசுக் கட்சியினரை ஒரு புறத்தில் ஒதுக்கிவைத்து (இதுவரை செய்ததுபோலாவது) தமிழ் மக்களின் உரிமைகளையும் தேவைகளையும் அவர்களின் ஆதரவாளர் அனுதாபிகள் மூலமாவது செய்திருக்கலாமே? "மனமுண்டானால் மார்க்கமுண்டு."

---

தப்பட வேண்டுமென்ற கிளிநொச்சி எம். பியின் கோரிக்கைக்கு போக்குவரத்து அமைச்சர் சம்மதம் தெரிவித்துள்ளதாகத் தெரிகின்றது.

சகல புகையிரத நிலையங்களிலும் நிலைய அதிபர்களதும் பெயர்ப்பலகைகள் தற்போது சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மட்டுமே இருக்கின்றது.

இதனைக் கண்டித்து பெயர்ப்பலகைகள் தமிழிலும் கண்டிப்பாக இருக்கவேண்டுமென போக்குவரத்து அமைச்சர் திரு எல். பி. ஹுருள்ளேக்கு கிளிநொச்சி எம்.பி, திரு கா.பொ. இரத்தினம் எழுதியிருந்தார்

திரு ஹுருள்ளே இக் கடிதத்திற்குப் பதிலாக திரு. கா.பொ. இரத்தினத்துக்கு எழுதியுள்ள கடிதத்தில் இது பற்றி உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்என்று தெரிவித்துள்ளார்.


Today and Tomorrow

SHAKESPEARE'S
TWELFTH NIGHT

*Presented by*
The English Dramatic Society
OF THE
Govt. Training College, MAHARAGAMA

*Produced by*
Augustine Tambimuttu

AT THE
TOWN HALL, JAFFNA

Two Shows Daily at 3-00 & 6-30 p. m.

RATES:
Rs. 5-00—3-00—2-00
and
Re. 1-00

Matinee Shows — Chairs Re. 1/- Benches -/50 cts.


*Proceeds in aid of*
Educational and Religious Institutions



ஜீவ ஹம்சம்

வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
★ சிவாஜிகணேசன் ★ ஜெயலலிதா
ஏ. வி. எம். ராஜன், ஜோதிலக்ஷ்மி
சோ, நாகேஷ்
நடித்த
ராம்குமார் பிக்சர்ஸ்
கலாட்டா கல்யாணம்

இப்பொழுது திரையிடப்படுகிறது!
யாழ் வெலிங்டன் திரையில்
தினசரி பி. ப. 2-30, மாலை 6-00 இரவு 9-30 மணிக்கு
போயா முன்தினம் போயா தினம்,
விடுமுறை நாட்களில் காலை 10-00 மணிக்கு


பத்மஸ்ரீ குணசித்திர நடிகர்
பானுமதி — எஸ். வி. ரங்கராவ்
ஏ. வி. எம். ராஜன் — பண்டரிபாய்
முத்துராமன் — பாரதி — நாகேஷ்
நடிக்கும்
வாசு பிலிம்ஸ் அளிக்கும்
பூவும் பொட்டும்
டைரக்ஷன்
தாதா மிராசி

4-வது வாரம்
இங்ஸ்லி பிளாஸா ஸ்ரீ கிருஷ்ண
(கொழும்பு) (வெள்ளவத்தை) (திருமலை)
எம். ஜி. ஆர். — ஜெயலலிதா
நடித்த
சந்திரோதயம்


இப்பத்திரிகை, ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு மே மாதம் 1-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org